My services are 100% FREE
வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அணுகுங்கள்
Para Tisi
"Don't wait to buy real estate. Buy real estate and wait."
Call Para 647.299.0599

31ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 31 | பாலம்: 04 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 15, 2021

# புதுப்பிக்கத்தக்க இயற்கைவள மின்சக்தி நிலையம்

இலங்கை அரசாங்கம் புதுப்பிக்கத்தக்க (Renewable) இயற்கை வளங்களைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையத்தை வடமாகாணத்தில் உள்ள மூன்று தீவுகளில் அமைப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றை சீன நிறுவனத்துடன் செய்வதற்கான அனுமதியை 2021 ஜனவரி 18இல் வழங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் புதுப்பிக்கத்தக்க இயற்கை வள மின்சக்தி நிலையத்தின் 'மாதிரித் திட்டம்' ஏற்கனவே அனலைதீவில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மாதிரித் திட்டத்தை இலங்கை மின்சார சபை (Ceylon Electricity Board) பராமரித்து வருகிறது. அது இந்த மாதிரித் திட்டத்தை அனலைதீவு, நயினா தீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய தீவுகளுக்கும் விரிவுபடுத்துவதற்காக உலகளாவிய ரீதியில் விண்ணப்பங்களைக் கோரியிருந்தது.

இங்கு மின்சக்தி புதுப்பிக்கத்தக்க இயற்கை வளங்களான காற்றாலை மற்றும் சூரிய ஒளியில் இருந்து தயாரிக்கப்பட இருப்பதால் இத்திட்டத்திற்கு சிறு தீவுகளில் அமைக்கப்படும் "Hybrid Renewable Energy System" எனப் பெயரிட்டு இலங்கை மின்சார சபை உலகளாவிய ரீதியில் விண்ணப்பங்களைக் கோரியிருந்தது.

உலகளாவியரீதியில் பல நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. அவற்றை ஆராய்ந்த அமைச்சரவைக்குழு இந்த மூன்று தீவுகளிலும் புதுப்பிக்கத்தக்க இயற்கைவள மின்சக்தி நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தத்தை சீனாவைச் சேர்ந்த இரண்டு நிறுவனங்கள் கூட்டாக (Joint Venture) சேர்ந்து Sinosar-Etechwin என்ற பெயரில் சமர்ப்பித்த விண்ணப்பத்திற்கு வழங்குவதாக 2021 ஜனவரி 18இல் முடிவெடுத்தது. இந்த ஒப்பந்தம் 12 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி வாய்ந்தது. இதற்கான பணத்தை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்க உள்ளது.

சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தாமல் காற்று மற்றும் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரித்து மின்கலங்களில் சேமித்து வைத்து பாவனைக்கு வழங்குவதன் மூலம் தீவுப்பகுதிகளுக்கு போதுமான அளவு மின்சாரத்தைத் தயாரிக்கும் திட்டம் 2017ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. அதன்படியே மாதிரித் திட்டம் அனலை தீவில் அமைக்கப்பட்டது.



அமைச்சரவைக் குழு தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களில் இருந்து குறைந்த பெறுமதி அல்லது சிறந்த தொழில்நுட்ப வடிவமைப்புப் போன்ற எந்த அடிப்படையில் Sinosar-Etechwin என்ற கூட்டு நிறுவனத்தைத் தேர்வு செய்தது எனத் தகவல் வெளியிடப்படவில்லை.

இந்திய நிறுவனங்களும் தமது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து இருந்தன. ஆனால் அவை Sinosar -Etechwin விண்ணப்பத்தை விடத் தரக்குறைவாக இருந்ததாக இலங்கை அரசு அதிகாரிகள் ஊடகத்துக்குத் தெரிவித்ததாக 'The Indian Express' ஊடகம் தெரிவித்துள்ளது.

சீன நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் இவ் ஒப்பந்தத்தை செய்ய முடிவெடுத்ததைத் தொடர்ந்து இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது. இந்திய அரசாங்கத்தின் இந்தக் கடும் எதிர்ப்பின் விளைவாகத்தான் இலங்கை அரசாங்கம் ஏற்கனவே இந்தியாவுடன் செய்து கொண்ட கிழக்கு கொள்கலன் முனையத்திற்கான (Eastern Container Terminal) ஒப்பந்தத்தை ரத்துச் செய்தது என 'The Sunday Times' ஊடகம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்த மூன்று தீவுகளிலும் பெரிய தீவான நெடுந்தீவு, இந்தியாவின் கடற்கரை நகரமான இராமேஸ்வரத்தில் இருந்து 48 கிலோ மீட்டர் தூரத்திலேயே உள்ளது. இவ்வாறு இந்தியாவிற்கு மிக அருகில் சீன நிறுவனத்திற்கு மின்சார நிலையம் அமைக்கும் ஒப்பந்தத்தை இலங்கை வழங்குவது இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பாகக் கரிசனையை ஏற்படுத்தி உள்ளது என்ற காரணத்தைக் காட்டியே இந்தியா தனது கடும் எதிர்ப்பை இலங்கை அரசுக்குத் தெரிவித்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'The Sunday Times' ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் தனது கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளதை இலங்கை அமைச்சரவை பேச்சாளரான Keheliya Rambukwella ஊடகங்களுக்கு உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த ஒப்பந்தம் குறித்து பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில், "இலங்கையில் என்ன நடக்கக்கூடாது என்று அஞ்சிக் கொண்டிருந்தோமோ, அது கடைசியாக நடந்தே விட்டது. தமிழ்நாட்டை ஒட்டியுள்ள மூன்று தீவுகளை சீனாவுக்கு எழுதிக் கொடுக்காத குறையாகத் தாரை வார்த்திருக்கிறது இலங்கை அரசு. அந்தத் தீவுகளை சீனா தளமாக மாற்றிக் கொண்டால், எந்த நிமிடமும் தமிழகத்தின் மீது தாக்குதல் நடத்தும் அளவுக்கு இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கும், தமிழகத்திற்கும் இடையில் உள்ள நெடுந்தீவு, அனலை தீவு, நயினா தீவு ஆகிய 3 தீவுகளில் காற்றாலை மற்றும் சூரிய ஒளியை ஆதாரமாகக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தத்தை சீனாவைச் சேர்ந்த Sinosar-Etechwin நிறுவனத்திற்கு இலங்கை அரசு வழங்கியுள்ளது. இத்திட்டம் ரூ.87.60 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது. மேலோட்டமாகப் பார்க்கும்போது இது ஒரு புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தைப் போன்று தோன்றும். ஆனால், இதன் நோக்கம் இந்தியாவின் பாதுகாப்புக்கு

தொடர்ச்சி 05ஆம் பக்கம்...)

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com

Lexus of Richmond Hill
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Sreet
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

BUY & SELL REAL ESTATE..
Pat Pushpakanthan
Full Time Broker
416 894-1187
20 Years
Listing Deal!!
HALL OF FAME
416-290 1200

உவகை
மணமக்கள் இணைப்பு
Uvakai
Marriage Broker
Valvai Zagara
647.885.6104

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Realtor
416.624.4803
suku07@hotmail.com
HOMELIFE

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129
Markham & Steeles
Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5
Markham & Eglinton
Tel: 416.264.3232
Dentistry for children, adults and seniors
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Dental Surgeon

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com

DREAM HOME
Buy , Sell, Invest or Rent
Residential or Commercial Properties
For All Your Real Estate Needs
Call Me With Confidence
24 / 7
More than 10 years of Successful Experience

WIGNA Sivapathasundaram
416 317 8449
RE/MAX COMMUNITY Realty Inc. Brokerage
RAISING YOUR VALUE

OASIS LLP
ADVISORS & CPAs
OUR SERVICES
Tax
- Personal Tax
- Corporate Tax
- HST Rental Rebate
Business Advisory
- Incorporation
- Tax Planning
- COVID-19 Loan Assistance
Accounting
- Bookkeeping
- Payroll
- HST/WSIB Returns
Financial Statements
- Notice to Reader
- Review Engagement
- Audit

Ramana Shiva, CPA, CGA, LPA
15 Wertheim Court, Suite 605
Richmond Hill, ON L4B 3H7
416-318-5771
ramana@oasisllp.ca
www.oasisllp.ca

# பிரயாக்ராஜ் – திரிவேணி சங்கமம் (அலகாபாத்)



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715

மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவனுக்கு ஆலயங்களை கொண்டுள்ள புண்ணிய பூமியாகவும் மற்றும் நதிகளின் சங்கமத்திற்கு ராஜா வாகத் திகழ்கின்றது பிரயாக்ராஜ். கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி என்ற மூன்று புண்ணிய நதிகள் சந்திக்கும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடிவிட்டு முக்கிமாகக் காணவேண்டிய இடங்கள் யாதெனில்.

(1) படுத்துக் கிடக்கும் அனுமான் கோயில் : யமுனை நதிக்கரையில் அமைந்துள்ள இந்த ஆலயத்தின் சிறப்பு என்னவென்றால் அனுமான் படுத்த கோலத்தில் காணப்படும் உலகின் ஒரே ஒரு கோயில்.

(2) அக்ஷய வடம் : யமுனை நதிக்கரை யில் அமைந்துள்ள அக்பர் கோட்டையின் உள்ளே பாதாள புரியில் காணப்படும் அழிவில்லாத அக்ஷய வடத்தின் வேர் பகுதியை தரிசிக்கலாம். இந்த அழிவில்லா ஆல மரத்தின் நடுப்பகுதி காசியிலும் மற்றம் நுனிப்பகுதி கயாவிலும் உள்ளதாக நம்பப்படுகின்றது. மகா பிரளய காலத்தில் உலகமே அழிந்தாலும் இந்த மரம் அழியாமல் இருக்கும். இந்த ஆல மரத்தின் இலையின் மீது அமர்ந்து குழந்தை கிருஷ்ணர் நதியில் மிதந்து வருவார் என்பது ஐதீகம். ராமர் வனவாசம் செல்லும்போது இந்த அழியா நித்திய மரத்தின் கீழே ஓர் இரவு தங்கியிருந்த தாகப் புராணங்களில் குறிப்பிட்டுள்ளன. இதன் காரணமாக அக்ஷயவட தரிசனம் மிகவும் புனிதமாக கருதப்படுகின்றது.




(3) பாதாள புரி கோயில்: இந்த ஆலயம் அக்பர் கோட்டைக்குள் பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு ராமர், சீதா, லட்சுமணர், சிவன், பார்வதி, காளி மற்றும் கால பைரவர் போன்ற தெய்வங்கள் சிறிய சிறிய சந்நிதிகளில் அமர்ந்து அருள் புரிகின்றனர்.

(4) சங்கர விமான மண்டபம்: திரிவேணி சங்கமத்தின் வடக்கே கங்கை நதியின் இடது கரையில் அமைந்துள்ள இந்த ஆலயம் 1986ஆம் ஆண்டு ஆதி சங்க ராச்சாரியாரின் நினைவாக உருவாக்கப் பட்டு சிவபெருமானுக்கு அர்பணிக்கப் பட்டதாகும். இந்த மண்டபம் மூன்று அடுக்குகளைக் கொண்டது. இதன் முதல் மாடியில் காஞ்சி காமாட்சியின் சன்னதி உள்ளது. இரண்டாவது மாடியில் வெங்கடாச்சலபதியின் சன்னதியும் மற்றும் மூன்றாவது மாடியில் ருத்தராட்சங்களால் உருவாக்கப்பட்ட கருவறையில் ஈசன் சகஸ்ரலிங்க ரூபராகக் காட்சி தருகின்றார்.

(5) ஆனந் பவன்: இந்த மாளிகை ஜவகர்லால் குடும்பத்தின் பூர்வீக இல்ல மாகும். இங்கு மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு மற்றும் இந்திரா காந்தி ஆகியோர் பயன்படுத்திய அறைகள் மற்றும் பொருட்கள் பாதுகாக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த மாளிகையில் வைத்து இந்திரா காந்தியின் திருமண நிகழ்ச்சி நடை பெற்றது. இந்த மாளிகையை 1970 ஆம் ஆண்டு இந்திரா காந்தி நாட்டிற்கு அர்ப்பணித்தார். இந்த வளாகத்தில் உள்ள வரலாற்றுப் புகழ்மிக்க ஸ்வராஜ் பவனில் இந்திராகாந்தி பிறந்து வளர்ந்தார். இந்த மாளிகை இந்திய தேசிய காங்ரஸுக்கு நன்கொடையாக மோத்திலால் நேருவால் வழங்கப்பட்டது. மேலும் இந்திய விடுதலைப் போராட்டத் திற்காகப் பல முக்கியமான முடிவுகள் இந்த மாளிகையில் வைத்து எடுக்கப் பட்டுள்ளது. தற்சமயம் இந்த வளாகம் இந்திய அரசினால் அருங்காட்சியகமாகப் பராமரிக்கப்படுகின்றது.

மேலே குறிப்பிட்டுள்ள இடங்களைச் சுற்றிப் பார்ப்பதற்கு ஒருநாள் போது மானது. இங்கு நவீன ஹோட்டல் வசதிகள்



மற்றும் தர்மசாலைகள் உள்ளன. பிரயாக்ராஜிக்கு அருகில் உள்ள காசியின் பெருமைகளை அடுத்த இதழில் காணலாம்.

# அனர்த்த காலத்தில் இழந்த கல்வியை மீட்டெடுத்தல்!

ந. அனந்தராஜ், B.A.(Hons.) - M.A
Dip-In-Edu.,Dip-In-Journalism, SLPS, SLEAS

2019ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் உலகையே அச்சுறுத்தத் தொடங்கிய கொரோனா வைரஸின் தாக்கம் இன்னும் முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை. ஒரு கோடிக்கும் அதிகமான மக்களைக் கொன்றொழித்த கொரோனா வைரஸின் பிடியில் இருந்தும் மனித குலத்தை மீட்டெடுப்பதற்கான ஒரு பெரும் போராட்டத்தையே உலக நாடுகளின் மருத்துவர்களும், மருத்துவ விஞ்ஞானிகளும், இரவும் பகலும் முயற்சிகளை எடுத்து வருகின்றனர். 'கோவிட்-19' எனப் பெயர் குறிப்பிடப்பட்ட புதிய ஆட்கொல்லி நோய்க்கு எதிரான தடுப்பூசியைக் கண்டு பிடிப்பதில் இந்தியா, பிரித்தானியா சீனா போன்ற நாடுகள் ஈடுபட்டு தடுப்பூசிகளைக் கண்டுபிடித்து அவற்றைப் பாவனைக்கு விட்டுள்ளமை ஒரு ஆறுதலாக இருந்தபோதிலும் அதில் இருந்து முற்றாகவே மக்களை மீட்டெடுப்பதற்கான போரட்டத்தில் இன்றும் ஒவ்வொரு நாடுகளும் முயற்சித்துக் கொண்டிருக்கின்றன.

கொரோனா வைரஸின் தாக்கம் எல்லா நாடுகளிலுமே ஒரே வகையான பாதிப்புக் களையே வெளிக்காட்டுகின்றன. குறிப்பாக-

* உற்பத்திகள் மற்றும் தொழில் முயற்சிகள் மட்டுப்படுத்தப்பட்டதால், மக்களினதும், நாட்டினதும் பொருளாதார நிலையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
* போக்குவரத்துக்கள் முடக்கப்பட்டுள்ள நிலையில், உறவினர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து உறவாடுவதற்கான வாய்ப்புகளும் தடுக்கப்பட்டுள்ளதால் மனித உறவுகளிடையே பாரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது.
* வீட்டில் உள்ள பிள்ளைகள் பாடசாலைகளுக்கோ தனியார் கல்வி நிலையங்களுக்கோ செல்லாத நிலையில், அவர்கள் வீடுகளுக்குள்ளேயே அடைபட்டிருப்பதால் அவர்களிடையே குழப்படிகள் அதிகரித்து, வீட்டின் அமைதி குலைகின்றது.
* போசாக்கான உணவு கிடைக்காமல் போவதால், ஆரோக்கியமும், உடல் வலுவும் பாதிப்படைகின்றது.
* திரையரங்குகள், பூங்காக்கள் போன்ற பொழுதுபோக்குத் தளங்கள் முடப்பட்டுள்ளதால் உளரீதியான பாதிப்புக்கள் ஏற்பட்டு மக்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.
* சுற்றுலாத் துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, விமானங்களின் போக்குவரத்துக்கான கட்டுப்பாடுகள் காரணமாக நாடுகளின் மொத்தத் தேசிய வருமானத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
* வீடுகளில் இருந்து தொலைக்காட்சிகள், இணையத்தளங்கள் மற்றும் இலத்திரனியல், அச்சு ஊடகங்கள் எல்லாவற்றிலுமே கொரோனா தொடர்பான செய்திகள், விவரணக் கட்டுரைகள், படங்கள் என்பன நாளாந்தம் பாதிப்படைவோர் எண்ணிக்கை, இறப்போர் எண்ணிக்கையை தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுவரும் நிலையில் இவற்றையே பார்க்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளதால், அவர்களின் மனோநிலை மேலும் பாதிப்படைகின்றது.



* ஒவ்வொருவரும் தாமாகவே தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டு ஒதுங்கி வாழத் தொடங்குகின்றனர். இதனால் தமக்கும் நோய் வந்துவிடுமோ என்ற அச்சத்தில் மனஅழுத்தம் (Mental Stress) மற்றும் உள நெருக்கடிகளுக்கு ஆளாகும் நிலையில் அவர்களில் பலர் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்குத் தள்ளப் பட்டுள்ளதையும் பார்க்கும்பொழுது இந்த ஆபத்தான நிலையில் இருந்தும் சிறுவர்களை எவ்வாறு மீட்டெடுப்பது என்பது பற்றி உலக சுகாதார ஸ்தாபனமும், ஐக்கிய நாடுகளின் சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்களும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றன. உலக நாடுகள் தமது மக்களை இந்தக் கொடிய நோயின் பரவுகையில் இருந்து காப்பாற்றுவதற்காக முடக்க நிலையை அமல்படுத்தி வருகின்றன. இது ஓரளவுக்கு எதிர்பார்த்த அனுகூலங்களை ஏற்படுத்தினாலும் இயல்பாகவே வளர்ச்சியடைய வேண்டிய பிள்ளைகளின் எதிர் காலம் கேள்விக்குரியதாகிக் கொண்டு வருகின்றது.

3 வயது முதல் 14 வயது வரையான கட்டாயக் கல்வியைப் பெறவேண்டிய குழந்தைகளும், சிறுவர்களும் உளரீதியாக மட்டுமல்லாது ஒழுக்க விழுமியங்களிலும் பின்னடைவைச் சந்தித்து வருகின்றனர். இவர்களின் கல்வி மற்றும் ஆளுமை விருத்திகளை வளர்த்துக் கொள்ளும் நிறுவனங்களான முன்பள்ளிகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பன மூடப்பட்டுள்ள நிலையில் பிள்ளைகளுக்கிடையிலான சமூக உறவுகளும், சுயாதீனமாகச் செயற்படும் தன்மைகளும் அற்றுப்போகின்றன. பிள்ளைகளை நான்கு சுவர்களுக்குள் அடைத்து வைத்து அவர்களுக்கு வேண்டிய உணவையும், ஓய்வு எடுத்துத் தூங்கும் வசதிகளையும், தொலைக்காட்சி மற்றும் இணையத்தள வசதிகளையும் ஏற்படுத்திக் கொண்டு, எவ்வளவு நாட்களுக்குத் தான் அவர்களை சமாளிக்க முடியும்?

இது சமூக நிலைநிறுத்தலிலும், இசைவாக்கத்திலும் பெரும் சவாலாக மாறிக் கொண்டு வருவதால், பிள்ளைகளின் இழந்த கல்வியை மீட்டெடுப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் பாடசாலை என்ற நிறுவனம் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் தன்னம்பிக்கையையும், அறிவுத் தேடலுக்கான வாய்ப்பையும், சுதந்திரமான நடமாட்டத்தையும் பரந்துபட்ட அறிவையும், வேறு எந்த பௌதிகச் சூழலும் ஏற்படுத்தாது.

இத்தகைய பாதிப்புக்களின் காரணமாக, தனியாள் ஒருவரில் ஏற்படும் கல்வியின் பாதிப்பின் காரணமாக முழுநாடுமே அறிவு சார்ந்த சமுதாயத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

உலகில் வெள்ளப்பெருக்கு, பூகம்பம், நிலச்சரிவு, சுனாமித் தாக்கம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் என்பன வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய காலத்திற்குள் நடந்து முடிகின்ற பேரழிவுகளாக இருந்தாலும், அதில் இருந்து மீண்டெழுந்து மீண்டும் பழைய வாழ்க்கையில் ஈடுபட்டு மகிழ்ச்சியாக வாழலாம் என்ற ஒரு நம்பிக்கை இருந்தது. ஆனால் தற்பொழுது முடிவற்ற ஒரு பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் 'கொவிட்-19' வைரஸ் நோயில் இருந்தும் முழுமையாக எப்பொழுது மீண்டெழ முடியும் என்ற நிச்சயமற்ற நிலையில் மக்கள் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு பேரழிவானது மாதக் கணக்கில் அல்லது வருடக் கணக்கில் நீடிக்கும் போது மனித வாழ்வின் அன்றாட செயற்பாடுகள் சீர்குலைவது மட்டுமல்ல, அதனோடு இணைந்த ஒவ்வொருவரினதும் உடல், உளநிலையும் பாதிக்கப்படுகிறது.

இந்தப் பாதிப்புகள் மாணவர்களைப் போன்றே ஆசிரியர்களிடமும் காணப்படுகின்றன. இத்தகைய நீடித்த அனர்த்தத்திற்கு முகம்கொடுக்கும் ஆசிரியர்களும், மாணவர்களும் தொடர்ந்து எவ்வாறு செயற்படுவது என்று தெரியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதன் விளைவாக அதிகளவில் மாணவர்களின் கல்வியே பாதிக்கப்படுகின்றது.

எனவே, 'கோவிட்-19' தொற்றினால், மாணவர்களிலும் ஆசிரியர்களிலும் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களில் இருந்தும் மீட்டெடுக்கும் வகையில் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாகப் பின்வருவனவற்றைக் கையாளலாம்:

* பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அவர்கள் வீட்டில் இருந்தே கற்பதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இது பாடசாலையில் பெறக்கூடிய ஒரு சூழலை அண்மித்ததாக இருக்க வேண்டும்.
* பூர்த்தி செய்யப்படாத பாடத்திட்டங்களில் தேர்ச்சி ரீதியான கற்றல் செயற்பாட்டையும், பயிற்சிகளையும் கணினி மென் பொருளுக்கேற்ற வகையில் திட்டமிடல் வேண்டும்.
* மின்னஞ்சல், கணினியைப் பயன்படுத்தித் தொலைக்கலந்துரையாடல்கள், (Tele Conference through Computer) போன்ற தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தொலைதூரக் கற்றல்-கற்பித்தலைப் பயன்படுத்துதல்.
* பத்திரிகைகளின் மூலம் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கேற்ற வகையில் பாடங்களை எழுதி, அவை தொடர்பான மதிப்பீட்டு வினாக்களையும் கொடுத்து அவற்றில் பயிற்சிகளை மேற்கொள்ள வழிப்படுத்துதல் வேண்டும். இத்தகைய செயற்பாடுகளில் பாடசாலை ஆசிரியர்களே ஈடுபடும் வகையில் அதிபர்கள் ஒரு கால அட்டவணையைத் தயாரித்துச் செயற்படுத்த வேண்டும். அதேவேளை இத்தகைய செய்பாடுகளின் முடிவில் பிள்ளைகளின் பெற்றோர்களுடனும் தொலைக் கலந்துரையாடல்கள் அல்லது ZOOM கலந்துரையாடல் போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் பிள்ளைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் இடையிலான இடைவினைத் தொடர்பு (Interaction) அதிகரிப்பதால் கற்றல் கற்பித்தலுக்கான பாடசாலைச் சூழல் ஏற்படுத்தப்படும். இவ்வாறு, 'கோவிட் -19' தொற்றுநோயின் உச்சப் பாதிப்பினால், உலகெங்கிலும் உள்ள ஒன்றரை பில்லியன் மாணவர்கள், மார்ச் 2020 வரை தொலைதூரக் கற்றலில் (On-Line Learning) ஈடுபட்டதாக யுனெஸ்கோவின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இது தற்பொழுது 2 பில்லியனாக

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 6, Scarborough, ON M1H 1A7

# நாமும் நமது இல்லமும் 577

# 2021 இல் ஆதன விலை அதிகரிக்கும் - TRREB



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

2020ஆம் ஆண்டில் ரொறொன்ரோவில் ஆதன விலை 1 மில்லியன் என்ற இலக்கைத் தாண்டியுள்ளது. கோவிட்-19இன் பாதிப்பு இருந்தபோதிலும் குறைந்த வட்டி வீதம் மக்களை ஆதனம் வாங்குவதைத் தடுக்கவில்லை. 2021ஆம் ஆண்டில் 100,000இற்கு மேற்பட்ட ஆதனங்கள் கைமாறலாமென Toronto Regional Real Estate Board (TRREB) தெரிவித்துள்ளது. இந்தப் பெறுமதி கடந்த வருடத்தை (2020) விட 10% அதிகமாகும். குறைந்த வட்டி வீதம் பெரிய அளவிலான (விசாலமான) இருப்பிடத்தை நோக்கி மக்கள் நகர்வதால் துணை நகர்ப்புற (Sub Urban), அரைக் கிராமப்புற (Semi Rural) பகுதிகளில் ஆதன விலை அதிகரித்து வருகிறது.

அதிகரித்துள்ள ஆதனம் வாங்குவோரின் எண்ணிக்கையும் (demand), குறைந்தளவு சந்தைப்படுத்தப்படும் ஆதனங்களின் எண்ணிக்கையும் (supply), குறைந்தளவு அடமானக் கடன் வட்டி வீதம் (low interest rate) என்பன ஆதன வியாபாரம் மிகவும் சிக்கலாக இருப்பதற்குரிய முதன்மையான காரணங்கள் ஆகும். இந்தக் காரணிகளால் ரொறொன்ரோவின் பெரும் பாகத்திலும் அதனைச் சுற்றிய பகுதியிலும் 2021இல் சராசரி ஆதன விலை $1,025,000இனை எட்டக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது 2020ஆம் ஆண்டின் சராசரி விலையைவிட 10% அதிகமாகும் என TRREBஇன் தலைமை ஆதனச்சந்தை ஆய்வாளர் Jason Mercer,Chief Real Estate Market Analyst தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற நிலைமை 2016இலும் இருந்தது. அதனால் ஆதன வியாபாரத்தை கட்டுப்படுத்துவதற்காக அடமானக் கடன் பெறுவதில் இறுக்க நிலையை 2016 ஒக்ரோபர் முதல் தடவையாகக் கொண்டு வரப்பட்டது. அதனால் பெரிய அடமானக் கடன் பெறுவதில் நெருக்கடி ஏற்பட்டது. ஆனால் இன்றைய குறைந்த வட்டி வீதம் பெரிய அடமானக் கடன் பெறுவதை இலகுவாக்கியது. கோவிட்-19இன் தாக்கத்தால் கனடியர் வீட்டிலிருந்து தொழில் புரிய வேண்டி இருப்பதால் விசாலமான இடம் தேவைப்படுகிறது. இதனால் துணை நகரப்புறப் பகுதிகளிலும் அரை கிராமப்புற பகுதிகளிலும் தனி வீடுகள் பெரிய வளவுகளுடனும் கூடிய வசதிகளுடனும் காணப்படுவதால் இந்தப் பகுதிகளுக்கு மக்கள் குடிபெயர்கின்றனர்.

துணை நகரப்புறப் பகுதிகளில் உள்ள



தனி வீடுகளின் சராசரி விலை ஜனவரி 2021இல் $1,308,393 என்ற இலக்கை எட்டியது. இந்தப் பெறுமதி கடந்த வருடத்தைவிட 36% அதிகமாகும். இதே கணக்கில் ரொறொன்ரோ நகரில் தனி வீடுகளின் சராசரி விலை $1,581,400 ஆகும்.

ஆனால் ரொறொன்ரோவில் அடுக்குமனைகளின் விலை தொடர்ந்து குறைந்து வருகின்றது. ஜனவரி 2021இல் சராசரி விலை $624,886ஆகக் குறைந்துள்ளது. இந்தப் பெறுமதி கடந்த வருடத்தைவிட 8% குறைவாகும். அத்துடன் அதிகமான அடுக்குமனைகள் வாடகைக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளது. பொருளாதார நிலையும், புதிய வரவாளர்களின் வருகையும் இந்த நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என TRREB எதிர்பார்க்கிறது. மொத்த அளவில் பார்க்கும்போது ஆதனத்தின் சராசரி விலை 15.5%இனால் அதிகரித்து $967,885ஆக ஜனவரி 2021இல் காணப்படுகிறது. கடந்த சில வாரங்களாகக் கோவிட்-19 பரவல் குறைந்து வருவதாலும், மாகாண அரசு வர்த்தக நிறுவனங்களை திறக்க இருப்பதாலும் ஆதன வியாபரத்தின் நிலைமை மேலும் இறுக்கமாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆதன வியாபாரம் பொதுவாக பெப்ரவரி மாதத்தில் மந்தமாக இருப்பது இயல்பே. ஆனால் இதுவரை நிலைமை மந்தம் அடைந்ததாகத் தெரியவில்லை. வருமான குறைந்த குடும்பங்களிலேயே கோவிட்-19 மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு மறுதலையாக வருமானம் கூடிய குடும்பங்களுக்கு இந்த நிலைமை சாதகமாகவே அமைந்துள்ளது. வருமானம் அதேயளவாக இருந்த போதிலும் செலவுகள் முற்றாகத் தவிர்க்கப்பட்டு சேமிப்பு அதிகரித்துள்ளது. இதுவும் பெரிய ஆதனம் வாங்குவதற்கு மேலும் ஒரு காரணமாகும். கோவிட்-19இன் பாதிப்பால் 17% ஆதன அடமானக் கடன்கள் பின்போடப்பட்டிருந்தன. அவர்களும் இப்பொழுது அடமானக் கடனைச் செலுத்தத் தொடங்கியுள்ளனர். கோவிட்-19இன் மூன்றாவது அலையொன்று தொடங்காமல் இருப்பின் 2021ஆம் ஆண்டு ஆதன வியாபாரத்தில் மீண்டும் ஒரு சரித்திர ஆண்டாக மாறலாம்.




## செம்மாதுளை முத்துக்கள் போல



15-02-2021 குடும்ப நன்நாள்


அம்மா அப்பா பிள்ளைகளென்று
அனைவரும் கூடிவாழ்ந்தா லதுகுடும்பம்
தப்பாயிருந்தால் திருத்தி அவரின்
தவறினை உணர்த்துதல் அப்பாக்கழகு
செப்பார் யாரும் அம்மாவையன்றி
செகத்தினில் பிள்ளைகளுக்கு நன்நெறிகாட்டல்
எப்பா டுபட்டும் குடும்பம் பேண
ஏறுபோல் உழைப்பவர் அப்பாவன்றோ?

அம்மா அப்பா இருவரும் இணைந்தே
அறிவினையூட்டி பிள்ளையை வளப்பர்
சும்மா இருக்கும் பாட்டன் பாட்டி
சுகமாய் வாழ வழிகள் சொல்வர்
தம்மா திரிபின்னாளில் பிள்ளைகள்
தவிப்பின்றி வாழ்ந்தால் சிறப்பெனக் கொள்வர்
செம்மா துளைமுத்து க்கள்போல்
சேர்ந்திருந்திட செழிப்புறும் குடும்பம்!

ஆதிகால மனிதவாழ்க்கை பெரும்
அவலம்சூழ்ந்த தனிமை வாழ்க்கை
நாதியின்றி வாழ்ந்த சோகவாழ்க்கை
நல்லதுகெட்டது உணரா வாழ்க்கை
சாதி சமயங்கள் இல்லா வாழ்க்கை
சங்கடங்களோடு வாழ்ந்த வாழ்க்கை
உதித்தநல் அறிவின்துணையோடு பின்னர்
உயரங்கள் தொட்டு நிமிர்ந்த வாழ்க்கை!

குடும்பம் குடும்பமாய் வாழ்ததில் உள்ள
குதூகலம் தன்னைப் புரிந்தபின் மனிதன்
எடுத்து வைத்த அடிகள் எல்லாமவனை
ஏற்றம்பெற வைத்ததை உணர்ந்தான்
தொடுத்துக் கட்டும் பூமாலைகள் போல
தோகை விரித்தாடும் மயில்களைப்போல
துடுப்புடன் இணைந்த ஓடத்தைப்போல
தூய அழகுறும் நல்லதோர் குடும்பம்!

பிள்ளைகள் இல்லாக் குடும்பமும்
பிஞ்சினைக் காணாச் செடிகளும்
கள்ளைச் சுரக்காத பனைகளும்
கதிரொளி புகாத மனைகளும்
எள்ளைக் காணாத எண்ணையும்
கவினுறு கறவைகளில்லாப் பண்ணையும்
முள்ளைக்காணாத ரோஜாவும்
முற்றுப்பெறாத கோலம்தான்!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

முடியாது என்று சொல்ல
வேண்டிய இடங்களில்
“தயவு செய்து முடியாது” என்று
கனிவாக சொல்லுங்கள்.
இது பல பிரச்சனைகளை
ஆரம்பத்திலே தீர்த்துவிடும்...!



# புதுப்பிக்கத்தக்க...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அச்சுறுத்தலை ஏற்படுத்துவது தான்.



இலங்கையில் செயல்படுத்தப்படவுள்ள கலப்பு மின் திட்டத்தின் மதிப்பு வெறும் ரூ.87 கோடி மட்டும்தான். இந்தத் திட்டத்தைக் கைப்பற்றுவதற்காக இந்திய நிறுவனங்களும் போட்டியிட்டன. ஆனால், சீன நிறுவனம் தாக்கல் செய்த ஒப்பந்தப் புள்ளி தான் தரமானதாக இருப்பதாகக் கூறி, அந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்கியுள்ளது இலங்கை அரசு. உண்மையில் இந்தத் திட்டம் என்பது இந்தியாவுக்கோ, சீனாவுக்கோ அல்லது அவற்றின் நிறுவனங்களுக்கோ சுண்டைக் காய்க்கு சமமானது ஆகும்.

ஆனாலும், இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தத்தை சண்டையிட்டு சீனா கைப்பற்றியதற்கும், இந்த ஒப்பந்தம் தங்களுக்கு கிடைக்காததற்காக இலங்கை அரசிடம் இந்தியா கண்டனம் தெரிவித்ததற்கும் காரணம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ள நிலப்பரப்பின் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற விருப்பம் தான்.

கலப்பு மின்திட்டம் செயல்படுத்தப்படவுள்ள நெடுந்தீவு, அனலை தீவு, நயினா தீவு ஆகிய தீவுகளில் மிகவும் பெரியது நெடுந்தீவு தான். இந்தத் தீவு தமிழ்நாட்டின் ராமேஸ்வரத்திலிருந்து 48கிமீ தொலைவில் உள்ளது. இலங்கைக்கு இந்தியா தாரை வார்த்த கச்சத்தீவிலிருந்து இந்தத் தீவு 23 கி.மீ தொலைவில் தான் உள்ளது. இந்தத் தீவுகளில் கலப்பு மின்திட்டத்தை செயல்படுத்தி அளவுக்கு அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்வதோ, கோடிக்கணக்கில் லாபம் ஈட்டுவதோ சாத்தியமல்ல.

மாறாக, அந்தத் தீவுகளுக்குத் தொழில்நுட்பப் பணியாளர்களை அழைத்துச் சென்று தங்க வைப்பதற்கு ஆகும் செலவுகள், அவர்களுக்கு அளிக்கும் ஊதியத்தையும் ஒப்பிட்டால், அதைவிடக் குறைவான செலவில், அதைவிட அதிகமான மின்சாரத்தை அமெரிக்காவிலிருந்து கூடக் கொண்டுவந்து விட முடியும். இவ்வளவையும் மீறி அந்தத் தீவுகளில் மின்னுற்பத்தித் திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தத்தை சீனா பெற்றிருப்பதற்குக் காரணம், அத்தீவுகளை இந்தியாவுக்கு எதிரான இராணுவத் தளமாக மாற்றிக்கொள்ளலாம் என்பதுதான்.

நெடுந்தீவில் மின்திட்டங்களை செயல்படுத்தும் போர்வையில் இந்தியாவை 24 மணி நேரமும் கண்காணிக்க முடியும். ஆயுதங்களையும், இராணுவத் தளவாடங்களையும் கொண்டு வந்து சேமித்து வைத்துக் கொண்டால், இரு நாடுகளுக்கு மிடையே போர் ஏற்பட்டால் உடனடியாக இந்தியாவைத் தாக்கி நிலைகுலைய வைக்க முடியும். இது சாதாரணமான ஆபத்து அல்ல. இந்த ஆபத்தின் தீவிரத்தை இந்தியா உடனடியாக உணர்ந்து, அதை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தியா, குறிப்பாகத் தமிழ்நாடு எந்த நேரமும் ஆபத்தின் விளிம்பில்தான் இருக்க வேண்டும். வடக்கில் லடாக் தொடங்கி வடகிழக்கில் சிக்கிம் மாநிலம் வரை இந்திய எல்லைக்குள் ஊடுருவ முயற்சி செய்து வரும் சீனா, இலங்கைத் தீவுகள் வழியாகத் தமிழகத்திலும் தொல்லை கொடுக்கத் தொடங்கும். அத்தகைய நிலை ஏற்பட்டால், இந்தியா வளர்ச்சியில் கவனம் செலுத்த முடியாமல் சீனாவை சமாளிப்பதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டிய நிலை ஏற்படலாம். அப்படி ஒரு நிலை ஏற்படுவதை இந்தியா இப்போதே தடுக்க வேண்டும்.

தென்னிந்தியாவில் சீனா தாக்குதல் நடத்த முயன்றால் அது இலங்கை வழியாகத் தான் நடைபெறக்கூடும் என்பதை பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறேன். அது இப்போது உண்மையாகி வருகிறது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் வலிமையாக இருந்தவரை இலங்கையில் காலூன்றி இந்தியாவைக் கண்காணிக்க வேண்டும், அச்சுறுத்த வேண்டும் என்ற உலக வல்லரசுகளின் முயற்சிகள் பலிக்கவில்லை.

திரிகோணமலையில் தளம் அமைக்க வேண்டும் என்று அமெரிக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் கூட முறியடிக்கப்பட்டன. இந்தியப் பெருங்கடல் பகுதியில் இந்தியாவின் ஆளுமையை அதிகரிக்க வேண்டும், இந்தியப் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இலங்கையில் விடுதலைப்புலிகள் வலிமையாக இருக்க வேண்டும் என்று முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி விரும்பினார். ஆனால் அவரது கொள்கைக்கு மாறாக இலங்கையில் ஈழத்தமிழரை ஒழிப்பதற்கான சிங்கள அரசின் சதிகளுக்குத் துணை போனதன் விளைவை இப்போது அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறோம்.

இலங்கைக்கு எவ்வளவுதான் உதவிகளைச் செய்தாலும் அது நமக்கு ஆதரவாக இருக்கப் போவதில்லை. கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு சரக்குப்பெட்டக முனையத் திட்டத்தை அமைப்பதற்காக இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை சிங்கள அரசு ரத்து செய்திருப்பதுதான் இதற்குச் சான்று ஆகும். இப்போதும் இலங்கையில் தமிழர் வலிமையுடன் இருப்பதுதான் இந்தியாவின் பாதுகாப்புக்கு நல்லது.

இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்ட கச்சத்தீவை திரும்பப்பெறுவது, இலங்கையில் தமிழரின் கரங்களை வலுப்படுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகளின் மூலமாகத் தான் சீனாவின் அச்சுறுத்தலை முறியடிக்க முடியும். எனவே, அதற்கேற்ற வகையில் இலங்கை சார்ந்த தனது வெளியுறவுக் கொள்கையை இந்தியா மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும், ஈழத்தமிழரை ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.


Tamil Women's Mental Health Program

தமிழ்ப் பெண்களுக்கான உளநலத் திட்டம்.

வசந்தம்-தமிழ் உளவளத்துணை நிலையமும் கனடாத் தமிழ் மருத்துவ அமைப்பும் இணைந்த ஒரு முன்னெடுப்பு

*மனச்சோர்வு, மன அழுத்தம், மனப்பதட்டம், குடும்ப வன்முறை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட 30 தொடக்கம் 50 வயதுக்கு உட்பட்ட தமிழ்ப் பெண்களுக்கான சேவை.*

எங்கள் சேவைகள்:

- தனித் தனியான ஆலோசனை அமர்வுகள்
- குழு ஆலோசனைகள்
- சமூகநல சேவைகளுக்கான பரிந்துரைகள் செய்யப்படும்

உங்களுக்கு நாம் உதவ எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
பரிந்துரைகள் செய்யும்படி வேண்டுகின்றோம்

தொடர்பு:
Vasantham – A Tamil Wellness Centre
வசந்தம் உளவளத்துணை நிலையம்
2660 Eglinton Ave E. Scarborough, ON
416-847-4172
vasanthamwellness@gmail.com

*குறிப்பு: கோவிட்-19 காரணமாக, பாதுகாப்பை உறுதிப்படுத்த, எங்கள் சேவைகள் இணையவழியும் தொலைபேசி மூலமுமே வழங்கப்படும்.*

CTMA
CANADIAN TAMIL MEDICAL ASSOCIATION



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL • TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stomatitis, Colitis

*Also other Acute & Chronic Problems*

HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*

# தமிழ் பேசும் மக்களை ஒன்றிணைத்த போராட்டம்




கடந்த 2009ஆம் ஆண்டு போர் முற்றுப் பெற்றதன் பின்னர் தமிழர் தாயகத்தில் இடம்பெற்றுள்ள மிக முக்கியமான எழுச்சிப் போராட்டமாக 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' பேரணி அமைந்துள்ளது.

பல தடைகளுக்கு மத்தியில், கடந்த 03ஆம் திகதி கிழக்கு மாகாணத்தின் பொத்துவிலில் ஆரம்பித்து கடந்த 07ஆம் திகதி வடக்கில் பொலிகண்டிக்கு வந்தடைந்து சாதனை படைத்துள்ளது இந்தப் போராட்டப் பேரணி. இது தமிழரின் ஜனநாயக வழிமுறையிலான போராட்டங்களில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது.

இதனை ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் போராட்டம் என்று கூறுவதே பொருத்தமானதாகும். ஏனெனில், முஸ்லிம்களின் ஆதரவும் இப்போராட்டத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தப் போராட்டம் தமிழ் தேசியத்தை கூர்மைப்படுத்தி நடத்தப்பட்டுள்ளமை மற்றுமொரு சிறப்பு என்று கூறலாம். ஆயுதப் போராட்டம் நடைபெற்ற காலங்களில் இடம்பெற்ற 'பொங்குதமிழ்' தமிழ் மக்கள் மத்தியில் உணர்வெழுச்சியை ஏற்படுத்திய நிகழ்வாகும். தமிழ் மக்கள் சாதி, மதம் மற்றும் பிரதேச பிரிவினைகளை மறந்து, தேசியம் என்ற புள்ளியில் ஒன்றிணைந்த எழுச்சி நிகழ்வாக அது இருந்தது.

போர் முடிவுற்றதன் பின்னர் இடம்பெற்ற சில நிகழ்வுகள் எழுச்சிப் போராட்டங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு நடத்தப்பட்டிருந்தாலும் தனிப்பட்ட கட்சிகளினதும், தனி நபர்களினதும் தேவைக்காகவே அவை நடத்தப்பட்டன.

தற்போது நடைபெற்றிருக்கும் 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' எழுச்சிப் பேரணி எந்தவொரு கட்சியையோ, அரசியல்வாதிகளையோ முன்னிலைப் படுத்தி நடைபெற்றதல்ல. வடக்கு கிழக்கில் உள்ள சிவில் சமூக அமைப்புக்களினால் அழைப்பு விடுக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட போராட்ட வடிவம். இதில் அரசியல்வாதிகளின் வகிபாகம் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதும் இதனை ஏற்பாடு செய்தவர்களால் நெறிப்படுத்தப்பட்டிருந்தன.




சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் குறிப்பாக, மதத் தலைவர்கள் முன்னணியிலும் அதற்கு அடுத்ததாக பல்கலைக் கழக மாணவர்கள், பொது மக்கள் என ஓர் ஒழுங்கமைப்பில் இந்தப் போராட்டப் பேரணி நெறிப்படுத்தப்பட்டது.

போராட்டப் பேரணி தொடங்குவதற்கு முன்னரே வடக்கு கிழக்கு பிரதேசங்களிலுள்ள பொலிஸ் தரப்பினரால் நீதிமன்ற தடை உத்தரவுகள் பெறப்பட்டு இந்தப் போராட்டத்தை தடுக்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால், இந்தப் போராட்டத்தில் பொதுமக்கள் இணைவார்களா? பொத்துவிலில் தொடங்கி முன்னேறிச் செல்ல முடியுமா? என்கின்ற கேள்விகள் எழுந்தன.

ஆனால், கொட்டும் மழையிலும், பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் மடை திறந்த வெள்ளம் போல பேரணி முன்னகர்ந்தது.

ஆரசியல்வாதிகளுக்கு இந்த நிகழ்வில் முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்றாலும் தொடக்க இடத்திலிருந்து பல்வேறு தடைகளை உடைத்து பேரணியை முன்னகர்த்தி விட்டதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எம்.ஏ. சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோரின் பணி முக்கியமானதும் பாராட்டத்தக்கதுமாகும்.

கிழக்குமாகாணத்தை கடந்து வரும் வழியில் இருந்த பல்வேறு தடைகளை எதிர்கொண்டு பொலிஸாரிடம் வாக்குவாதங்களை மேற்கொண்டு பேரணியுடன் வந்த நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பாராட்டப்பட வேண்டியவர். தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் முரண்பாடுகளைக் கொண்ட கட்சிகளைச் சேர்ந்தவர்களே இதனை ஒப்புக் கொள்கின்றனர்.

இறுதிக் கட்டத்தில் அரசியல்வாதிகள் முன்னரங்கிலிருந்து பின்வாங்கிக் கொண்டனர். பேரணி ஒழுங்கமைப்பின் படி இது நடைபெற்றதாக கூறப்படுகின்றது. இதில், அரசியல்வாதிகள் சிலருக்கு மனக்குறைகள் இருக்கலாம். ஆனால், இதுவே தமிழ் தேசியம் சார்ந்த வெற்றியாக அமைந்துள்ளது.



கடந்த காலங்களில் நடைபெற்ற சில நிகழ்வுகள் தனிப்பட்ட கட்சிகளால் மட்டும் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படடிருந்தன. ஆவற்றை எழுச்சி நிகழ்வுகள் என்று அடையாளப்படுத்தினாலும் சம்பந்தப்பட்ட கட்சி உறுப்பினர்களும், அக்கட்சிகளின் ஆதரவாளர்களுமே அந்த திகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர். பொதுமக்கள் அவற்றில் அணிதிரளவில்லை.

அது மட்டுமன்றி, முள்ளிவாய்க்கால் போன்ற நினைவு நாட்களின் போது கூட தனித்தனியாக கட்சிகள் வணக்க நிகழ்வுகளை நடத்தியிருந்தமையும் ஒரு கேலிக் கூத்தாகவே அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இவ்வாறு தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் பிரிந்துள்ள சூழ்நிலையில், தமிழ் பிரதேசங்களில் சாதி, சமயம் சார்ந்த கட்சிகளும் முளைவிட ஆரம்பித்தன.

இது தமிழ் தேசியத்தை முற்றாகவே சீர்குலைக்கும் நடவடிக்கையாகவே அமைந்தது. பொதுமக்கள் இதன் காரணமான தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் நம்பிக்கை இழந்த நிலையிலேயே இருந்தனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில்தான் அரசியல், சாதி மத, பிரதேச எல்லைகளைக் கடந்து அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கி 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' பேரெழுச்சிப் பேரணி வெற்றிகரமாக நிறைவடைந்திருக்கின்றது.

தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகளுடன் தமிழ்பேசும் மக்கள் என்ற அடிப்படையில் முஸ்லிம் மக்களின் மத சுதந்திரத்தையும் வலியுறுத்தும் கோரிக்கையினையும் முன்வைத்து இந்தப் போராட்டம் நிகழ்த்தப்பட்டதால் முஸ்லிகளின் ஆதரவையும், பெற்றுக்கொள்ள முடிந்தது.

இன்று கொரோனா தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களை அவர்களின் மத முறைப்படி அடக்கம் செய்ய அரசாங்கம் தடைவிதித்துள்ள நிலையில், அவர்களின் மத உரிமையினை வெளிப்படுத்தும் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டதால் முஸ்லிகள் முதற் தடவையாக இவ்வாறானதொரு போராட்டத்துடன் தங்களை இணைத்துக்கொண்டுள்ளனர்.

அத்துடன் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையும் இதில் உள்ளடக்கப் பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

விளம்பரம்
VLAMBARAM

31 ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

## இயற்கை மனித இனத்தை அழித்திடுமா?


### இயற்கையின் சீற்றம்

இயற்கைவள அழிவுநிலை இப்படியே தொடர்ந்ததனால்
இனமழிப்பை இயற்கைசெயும் காலமினி வந்துவிடுமோ?
வியப்புமேது? பொறுமைக்கோர் எல்லையுண்டு தெரிவீரோ!
வீறுகொண்டால் இயற்கையன்னை வெற்றிகொள்ளும் புரிவீரோ!

கலங்கியதும் கதறியதும் காட்டுத்தீ பரவியதால்
கருகிஉயிர் நீத்திட்ட உயிரினங்கள் நிலைகண்டு
குலுங்கிப்பல நாளெல்லாம் குமுறியதும் இயற்கையன்றோ?
கொறோனாதரும் அழிவுமனித குலத்திற்கோர் படிப்பனையே!

காடுகளை விளயாட்டாய்க் கனல்மூட்டி எரித்து வந்தீர்!
கடல்நீரை மாசாக்கிக் கடலினங்கள் அழித்திட்டீர்
சுடுகாடாய் மாறிவிட்ட நகரங்கள் சொலப்போமோ
தொடர்ந்திட்ட போர்களினால் துடித்திறந்தோர் தொகையேதோ?

இயற்கையதன் சீற்றத்தைத் தணிப்பவரும் எவருண்டோ?
எரிமலைகள் வெடித்திடுமோ? துருவங்கள் உருகிடுமோ?
பயப்படுத்தும் சுனாமிவந்து பலியெடுத்து அழித்திடுமோ?
பாரிற்பல கண்டங்கள் கடற்கோளால் மூழ்கிடுமோ?



பல்வைத்திய கலாநிதி
இளமுருகனார் பாரதி


நம்மை நாமே
காத்துக் கொள்வோம்!
முழங்கையால்
மறைத்து
இருமலாம்
உங்கள்
கைகளைக்
கழுவுங்கள்
2 m
எப்போதும் 2மீ
இடைவெளிவிடுங்கள்
அனைத்து வகையான
பொது போக்குவரத்திலும்,
மூடப்பட்ட அல்லது ஓரளவு
மூடப்பட்ட பொது இடங்களில்
10 வயது அல்லது அதற்கு
மேற்பட்ட அனைவருக்கும்
இந்த வழிமுறைகள்
பின்பற்றப்பட வேண்டியது
கட்டாயமாகும்.
உங்கள் முகத்தை
மறைக்கவும்
Québec.ca/coronavirus
1 877 644-4545
Votre
gouvernement
Québec

## BASEMENT FOR RENT

**Scarborough golf club & Ellesmere**
3 rooms , 1 kitchen & 1 washroom bsmt for rent. Sep. entrance, 1 parking. Avail. March 01, 20201.
தொடர்புகளுக்கு: **416.451.0055**

**Scarborough golf clup & Lawrence**
2 bedroom bsmt for rent. Sep. entrance, Close to School, bus. Sep. kitchen & washroom. Sun windows. Avail. April 15, 2021. தொடர்புகளுக்கு : **416.438.2660**

**STAINES & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, Close to all facilities. Avail. immediately.
**416. 831.1243 /647.407.6829**

**MACCOWAN & HIGHGLEN**
2 bedrooms bsmt for Rent. Sep. Entrance, Parking. Close to bus, schools & HWY 407. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.540.1475**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to facilities. Avail. March 01, 2021.
தொடர்புகளுக்கு: **416.885.1033**

**KENNEDY & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Utilities included. Close 24 hours bus service. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.706.5851**

**MORNINGSIDE & MCNICOLL**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Couples/small family/female student only preferred. No pets.
தொடர்புகளுக்கு: **416-648-7078**

**MARKHAM & STEELES**
1 Bedroom Bsmt for rent. Sep.Entrance, sep. laundry. Close to all Facilities. Avail. Immediately.
**Contact: 647.280.9385**

**MORNINGSIDE & ELLESMERE**
2 bedroom bsmt for rent. 1 parking. Close to university, bus, TTC, school & other all facilities. Avail. immediately.
**Contact: 647.656.9050**

**MORNINGSIDE & FINCH**
3 bedroom bsmt for rent. Sep.Entrance, sep. laundry. Walking distance to TTC facilities. Avail. immediately.
**Contact: 647.296.7932**

**STEELES & STAINES AREA**
1 bedroom full basement for rent for small family or for 2 persons Separate entrance 24 hours Buses and more
**Contact: 647-281-5694**

**9TH LINE & 14TH AVE.**
2 bedroom Bsmt for rent. Sep. Entrance, 1 parking. No pets. Avail. immediately
தொடர்புகளுக்கு: **647-867-5307**

**WARDEN & FINCH**
1 Bedroom walkout bsmt for rent. Avail. March 01, 2021.
தொடர்புகளுக்கு: **647.667.0482**


31 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை வெளியிடப்படும் (vlambaram.com) சிறு விளம்பரங்களைக் கொண்ட 10,11,12 ஆகிய பக்கங்களின் அச்சுப் பிரதிகளை GTA Square இலும் ஏனைய முன்னைய தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.


## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Female preferred. Close to bus & other all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.848.1143**

**BIRCHMOUNT & EGLINTON**
2 bedroom basement for rent, separate entrance also close to all facilities. Only families available immediately.
**Contact: 416.821.2181**

**MIDLAND & ST. CLAIR**
One big bedroom, big living room, big kitchen and own laundry room. Ready to move March 1st. **Contact: 647-580-5622**

**MARKHAM & STEELES**
2 Bedroom walkout bsmt for rent. Small working family preferred. Close to School & facilities. Avail. March 01, 2021.
**416.660.4874 / 416.258.8755**

**MORNINGSIDE & STAINES**
2 Bedroom bsmt for rent. Sept. entrance, 1 parking. Close to all facilities. Avail. immediately. Students / family preferred.
**416.494.7149 /647.467.1622**

**ELLESMERE & NEILSON**
2 Bedroom fully renovated bsmt for rent. kitchen, Sep. entrance, Sep. patio, laundry. Family preferred. Avail. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.560.1812**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom furnished Bsmt for Rent. Sep. Entrance. No pets or no smoke. Close to 401,mall, TTC@door U of T, centaial. Parking.
தொடர்புகளுக்கு: **416.834.1081**

**FINCH & NEILSON**
1 Bedroom BSMT for rent. Sep. entrance 1 Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **(416) 670-7493**

**MCCOWAN & DENISON**
1 bedroom bsmt for rent. Kitchen & washroom with Sep. entrance. Starting February 1st. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416-836-5284**

**MCCOWAN & STEELES**
1 bedroom bsmt for rent. Sep. entrance. 1 Parking. Close to TTC, YRT. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.727.4545**

## BASEMENT FOR RENT

**ELLESMERE & BELLAMY**
2 Bedroom basement for rent. Sep.entrance. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416-837-5023**

**MARKHAM & DENISON**
2 Bedroom basement for rent. Sep. entrance. Parking, Laundry. Close to costco & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.300.7595**

**MORNINGSIDE & FINCH**
2 bedroom BSMT for rent. Sep.entrance, Close to TTC. Suitable for a couple, students or bachelors. Avail. from March 01, 2021.
contact at: **647.606.8326** ( Please text)

**NEILSON & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking. Close to all facilities. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416-627-2239**

**MEADOWVALE & HWY 401**
2 Bedrooms Bsmt for Rent. Sep. Entrance. 2 parking. Close to TTC, School, college, U of T & HWY 401. No pets or no smoking.
தொடர்புகளுக்கு: **647.918.5274**

**MORNINGSIDE & STAINES RD**
2 Bedroom, 1 washrooms, Sep. laundry, sep. Entrance, 2 parking lot spot. Close to TTC, No smoking & No pets ( expecting Asian )
தொடர்புகளுக்கு: **416.388.2794**

**MCCOWAN & DENISON**
2 bedrooms basement for rent. Sep. Entrance. laundry. Close to all facilities. Avail. Immediately. **Call (647) 504 7982**

**MARKHAM & STEELES**
3 bedroom newly renovated, basement for rent. Sep. entrance, parking. Small family preferred. No smoking, no pets.
**Contact: (647) 712-2692**

**MORNINGSIDE & OASIS BLVD**
1 bedroom bsmt for rent. Laundry and car parking. Only for Pentecost christians. Close to school,TTC. Avail.Immediately
**Contact: 416.831.8549**

**STEELES & STAINES RD**
2 Bedroom, 1 washrooms, Sep. laundry, sep.Entrance with 2 parking lot spot. No smoking & No pets (expecting Sri lankan )
Contact: **416.388.2794**

## BASEMENT FOR RENT

**Morningside & Morningview Trail**
2 Bedrooms newly renovated Bsmt for Rent. Living room & 1 parking. Family preferred.
தொடர்புகளுக்கு: **(416) 564- 4200**

## BASEMENT FOR RENT

**MARKHAM & HIGHGLEN AVE.**
2 or 3 Bedroom Bsmt for rent. Close to Markham road. Sep. entrance. 2 Parking. Avail. April 01, 2021. No smokers, No pets
**416-554-6553/905-472-0915**

## BASEMENT FOR RENT

**9th Line & 14th Avenue**
2 bedrooms newly renovated, legal basement for rent, Sep. laundry, Sep. entrance, parking, close school. Walkup Basement Feel Like An Upper Home. No smoking, no pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **(416).558.7381**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & NIGHT STAR**
2 Bedroom bsmt for rent. Parking, laundry, utilities. Couple preferred. Close to all facilities. Avail. immediately.
**416.332.1513 / 647.980.1513**

## BASEMENT FOR RENT

**Altona / Sheppard (Pickering)**
2 bedroom bsmt for rent. Sep. laundry. No smoking. 1parking. Couple/students/ small family preferred. Rent$1250 +30% utilities. தொடர்புகளுக்கு:
**416.841.7117**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MILITARY TRAIL**
3 bedroom walk out Bsmt for rent. 2 full washroom. separate laundry, close to schools etc.Close to University & schools. No pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.670.8331**

## வீடு வாடகைக்குபெற்றிட / கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட
அழையுங்கள்: **647.402.2937**

மேலும் பக்கங்கள் 9, 10

## ROOM FOR RENT

**PHARMACY & FINCH**
1 Room for rent. Unlimited Internet, Sep. Washroom. Close to all facilities.
Avail. March 01, 2021.
**416.201.1222 / 647.261.0216**

**KENNEDY & ELLESMERE**
1 Room for rent. Parking, laundry. Female Preferred. Close to all facilities.
Avail. immediately.
**416.474.4958/416.474.4935**

**LAWRENCE & BIRCHMOUNT**
1 Room for rent in a basement. Close to all facilities. No smoking
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.750.4696**

**DANFORTH & EGLINTON**
1 Room for rent in main floor. Laundry. Close to all facilities. Avail. March 01, 2021.
தொடர்புகளுக்கு: **647.838.6636/**

**NEILSON & MCLEVIN**
1 Room for rent in townhouse. No parking, laundry, internet. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.993.4951**

**HWY 7 & 9TH LINE**
1 Room for rent in bsmt. Sep. entrance. 1 Parking, laundry. Female only. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.737.1146**

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance. Working Female or student preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

**MORNINGSIDE & MCLEVIN**
Room for rent. Parking, Laundry. Men preferred. Close to 401/ ttc / school Close to all Facilities.
**416.875.1211 / 416.720.4472**

**KENNEDY & LAWRENCE**
1Room for rent in a bsmt. Sep. Entrance. Only women. Close to all Facilities.
தொடர்புகளுக்கு: **647.709.8484**

**MARKHAM & LAWRENCE**
Room for rent. Sept. Entrance. 1 parking, Laundry. No kitchen NO SMOKING , NO PETS. Close to bus stop & groceries store.
**Kamal: 647.763.5223**

**SCARB. GOLF CLUB & ELLESMERE**
1 furnished room for rent in a bsmt. Kitchen, washroom & laundry All utilities included. Prefer Males only.
தொடர்புகளுக்கு: **416.519.1016**

**MARKHAM & ELLESMERE**
1 master bedroom available in a 2 bedroom apartment. Rent $800. Female or couples preferred. Avail. March 01, 2021.
தொடர்புகளுக்கு: **416.725.4735**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**MANSE & LAWRENCE**
2 Bedroom basement apartment, living hall, kitchen, washroom, and laundry room. TTC within walking distance, shopping mall nearby, and schools nearby.
Available March 01st 2021.
தொடர்புகளுக்கு: **416.994.7849**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & DENISON**
2 Bedroom basement apartment for rent. Separate entrance, parking included close to Catholic and public elementary schools. Close to Steeles Avenue. Both TTC and YRT buss available near by. Available from immediately.
**Contact: 416.315.3819**

## BASEMENT FOR RENT

**STAINES & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.284.2346**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & FINCH**
2 Bedrooms, Sep. Entrance , Kitchen & Washroom, shared laundry. No Pets & No Smoking. Close to all Facilities. Avail. IMMEDIATELY.
**CALL OR TEXT:**
**647.642.2323 or 416.335.3460**

## BASEMENT/ROOM FOR RENT

**MARKHAM & DENISON**
New 2 Bedroom Bsmt for Rent. No pets, Non smoker. Sep. entrance,1 parking. Avail. March 01, 2021.
Also **1 Room** for rent in upstairs for Rent in a 4 bedroom house. Bsmt rent is $1600 +utilities,1 Room upstairs is $800.
தொடர்புகளுக்கு: **(416) 826.8811**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
One bedroom **basement for rent** with sep. entrance. Lots of facilities nearby. No smoking or No pets.
தொடர்புகளுக்கு: **416.879.9603**

## BASEMENT FOR RENT

**ELLESEMERE & MILITARY TRAIL**
3 bedroom BSMT for rent. Sep.entrance. Walking distance to UTSC, Looking for students/small families! Each bedroom has its own bathroom! Utilities included. Minutes from ON-Highway 401 No pets. No smoking! Rent negotiable!
**Contact via text: 416.876.3241**

## BASEMENT FOR RENT

**KENNEDY & LAWRENCE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, Parking,laundry. Close to all facilities.
Avail. March 01, 2021.
தொடர்புகளுக்கு: **416.219.6062**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom basement for rent. Sep. entrance. Laundry. Close to all facilities. Avail. immediately.
**MORNINGSIDE & ELLESEMERE**
parchulor basement for rent. Sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **(416) 818-1542**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & BRIMORTON**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Close to Scarborough Centre. Available immediately.
**416-918-5065/365-988-6673**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedroom newly renovated bsmt for rent. 2 washroom, side door, included car parking.
More information please to call:
**647-215-2533/647-588-2533**

## BASEMENT FOR RENT

**9TH LINE & STEELES**
2 bedroom New basement for rent. 1 car parking lot, sep. entrance, sep. laundry room.
**Contact. 416-832-6276**

## ROOM FOR RENT

**9TH LINE & 14TH AVE**
(Boxgrove Neighbourhood - close to Steeles) 1 Bedrm+ 1 ensuite bathroom in house. Rent: $650 utilities, parking, laundry. No Pets/No smoking/ Female Preferred
**Please call/text: 647.327.0553**

## ROOM FOR RENT

**MCCOWAN & FINCH**
1 large rooms for rent in an Apartment with furniture. Parking, internet. No smoke or no pets. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.276.6884**

## APARTMENT FOR RENT

**Lawerance and Pharmacy**
Commercial plaza 2 bedroom apartment available for a family.
Avail. from February 2021.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

## HOUSE FOR RENT

**BROCK & KINGSTON**
3 +1 bedroom full (including basement ) house for rent. 3 & ½ washrooms. Parking space up to 5 cars. Avail. March 01/earlier.
**Pl. call: 416.830.8513**

**BRIMLEY & EGLINTON (TOP-LEVEL)**
3 Bedrooms, 1 Washroom Bangalow house for rent. Parking. only for families.
Avail. immediately.
**Pl. Call: 647.406.2999**

**BELLAMY & LAWRENCE**
Newly renovated 3 Bedroom **House** for rent. No smoking. Family preferred. Parking included. AVAILABLE ANYTIME!
தொடர்புகளுக்கு: **416.505.9465**

## ROOM FOR RENT

**DANFORTH & EGLINGTON**
2 Rooms avail. for Rent. WiFi, Laundry, 24 hours bus service, Walking distance to Grocery stores, Pharmacy, Banks etc. Closer to Kennedy Subway, Scarborough Center, Bellemy Go station.
**Contact :647.869.9733**

## ROOMS FOR RENT

**MARKHAM & DENISON**
3 Bedroom,2 Bathroom new bsmt for rent. Sep.entrance, car parking, sep.laundry. only family. Close to all facilities. Avail. immediately. Near cosco.
தொடர்புகளுக்கு: **647.292.1265**

## HOUSE FOR RENT

**STEELES & STAINES**
3 Bedroom & 3 washroom house (Main floor) for rent. Rent $2300.
2 parking on driveway. Grage not include.
Close to public school, TTC & park.
2 bed, 1 washroom & kitchen basement also available
தொடர்புகளுக்கு: **416.509.7247**

## HOUSE/BASEMENT FOR RENT

**PORT UNION & LAWRENCE**
2 Bedroom Bungalow house for rent. Rent $2000+Utilities. 4 Parking, laundry. 1 bedroom **basment** also available. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **(416) 707-1674**


சுயநலம் என்பது சிறு உலகம். அதில் ஒரேயொரு மனிதன்தான் வாழ்கிறான்.

மேலும் பக்கங்கள் 8, 10

## HOUSE/BASEMENT FOR RENT

**FINCH & MIDDLEFIELD**
1 bedroom basement for rent.
**MARKHAM & STEELES**
3 bedrooms house for rent.
தொடர்புகளுக்கு:
**647.686.8590**

## HOUSE FOR RENT

**MARKHAM & STEELES**
Newly fully renovated three bedrooms & one full washroom bungalow house main floor for rent . Bus stop five minutes walking distance, school, bank, mall, HWY 401 & many others are all five minutes or less car ride away. FAMILY ONLY.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

## HOUSE FOR RENT

**TABSCOTT & FINCH**
4 bedrooms Bungalow house with 2 washrooms in main floor and 3 bedrooms walkout basement also avail. immediately. No pet/ No smoking. Close to bus stop and groceries.
**Call: 647.676.1164/ 647. 703.4109**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 bedrooms 1 washroom Two-story Townhouse for rent. Living & dining room, kitchen, private terrace, parking & Sep. laundry room. Close to all major supermarkets, 401 and all amenities, one minute walk to TTC. Avail. March 15, 2021
**416-832-0982 / 647-785-3046**

## HOUSE FOR RENT

**McCowan & Lawrence**
3 Bedrooms renovated bangalow house for rent.
Parking. 2 min hospital ,ttc.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.999.9997**

## VAANI ACADEMY

**3 Years To High School & Adult.**
Vocal , Violin, Tamil
இணைய வழி ஊடாக வகுப்புகள் நடைபெறுகிறது.
**Call : 416.560.1812**
**Mrs. T Srijena (BFA Music)**
**Email: thayanasri@gmail.com**

## வேலைக்கு ஆள் தேவை

**MORNINGSIDE**
**OSIS & SESSION DRIVE**
சந்திக்கு அருகாமையில் காலை 7:00am 9.00pm வீட்டில் சமைப்பதற்கு or cleaning செய்வதற்கு ஆள் தேவை. பெண்கள் அல்லது வயதானவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **647.763.9120**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**NEWMARKET & AURORA**
**Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை.
**647.308.7221**

## பராமரிப்பாளர் தேவை

ஸ்காபரோவில் வாழும் Wheel Chairஇல் இருக்கும் வயதான பெண்மணி ஒருவரை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு (Full Time) பெண் பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை. வெளிநாட்டில் இருந்தும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு:
தொடர்புகளுக்கு: **647.540.9520**

## பராமரிப்பாளர் தேவை

ஸ்ரோவில் பகுதியில் 70 வயதான பெண் ஒருவரை பராமரிக்க பெண் பராமரிப்பாளர் தேவை. ஊதியம் வேலை நேரம் பேசி தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு : **416.558.4998**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**647.296.7932**

## SALE / RENT

**MARKHAM & SHEPPARD**
4 bedroom & 3 washroom house for **Sale.**
**NEILSON & SHEPPARD**
2 bedroom & 2wasroom Houses for **Rent.**
Kannan Kankesu: **416.834.4200**

## ROOMS FOR RENT

**TAUNTON & HARMONY**
Rooms available in a house.
Located: Oshawa (Taunton & Harmony).
Shared kitchen & laundry. Avail. Parking space. available.
தொடர்புகளுக்கு: **416.731.3314**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & KINGSTON ROAD**
2 bedrooms Bsmt for Rent. Sep.Entrance. Parking students or Family preferred. Close to U of T Avail. immediately.
**MORNINGSIDE & KINGSTON ROAD**
1 bedroom Bsmt for Rent. Sep.Entrance. laundry, parking students or Family preferred.Close to U of T. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.722.1621 / 647.247.3830**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
Newly renovated bsmt for rent. Includes 1 bedroom, living room, washroom, kitchen, laundry, parking spot, Utilities & wifi. Walking distance to bus stops, grocery stores & schools.
**Please call or text : 647-712-5258**

## HOUSE FOR RENT

**LAWRENCE & OVERTURE**
3 bedroom house (main floor) for rent. 1 bath, laundry in unit, new kitchen with stainless steel appliances, new flooring windows. 1parking on driveway Close to all amenities, TTC, Hwy 401, close to Guildwood GO station, Avail from March 01, 2021. $2050 (neg) +utilities (50%). Family preferred.
**Contact Vidhya : 416-931-1165**

## HIRING NOW !

**FULL TIME FACTORY WORK at**
K-Line Insulators in Scarborough
Must be willing to work on 3 shifts.
No previous experience required,
good English skills important.
Send resume to **amatias@k-line.net**

## OFFICE SPACE FOR RENT

Office area and well equipped educational training/boardroom rooms are available for lease. Rooms are available for $650 and above.
It is suitable for small individual office, training, conferences & professional meetings with all facilities.
**Two locations :** Toronto: **Markham and Finch** -
Mississauga: **Hurontario and Matheson Blvd.**
**Please contact Sam at : 416-918-9848/416-857-7603**





















## கனடாவில் ஆயுர்வேத வைத்தியராக அனுமதிப்பத்திரம் பெற விரும்புகிறீர்களா?

**ஆயுர்வேதத்தைக் கற்றுக் கொள்வதற்கும் உங்கள் வாழ்க்கையில் மற்றவர்களிற்குச் சிகிச்சை அளிப்பதற்கும் இது ஒரு பொன்னான வாய்ப்பு.**

**பாடநெறி முக்கியமாக ஆயுர்வேத மருத்துவ நடைமுறை, ஆயுர்வேத மருந்தகம் மற்றும் பஞ்சகர்மா சிகிச்சைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.**

**அடுத்த தொகுதி வகுப்புகள்**
**பெப்ரவரி 15, 2021 அன்று தொடங்குகின்றன.**

**ISAAC** ஆயுர்வேதத்தின் ஒரு குடும்பமாகும், இது ஆயுர்வேத பயிற்சியாளர்களுக்கு 2016 முதல் கல்வி கற்பித்தலில் சிறந்து விளங்குகிறது. இந்தப் பாடத் திட்டத்தில் பிரதானமாக விரிவுரைகள், மருத்துவ நடைமுறை, சமூக நடைமுறை மற்றும் ஆலோசனை ஆகியவை உள்ளடங்குகின்றன.

**ஆயுர்வேத மருத்துவம் கற்க ஆர்வமுள்ளவர்கள்:**
எமது கல்லூரியை **416-831-4536** என்ற எண்ணில் அல்லது **ratvijay@hotmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.

எம்மிடம் கபசுரக் குடிநீர் மற்றும் தொற்று, நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் உடல் வலிமைக்கான பிற ஆயுர்வேத மருந்துகள் விற்பனைக்குண்டு.




# தமிழ்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

தமிழ் பேசும் மக்கள் இன்று ஜனநாயக ரீதியிலான போராட்டங்களைத் தொடர்ந்து நடத்த வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வகையிலான போராட்டங்கள் வலுப்பெற வேண்டுமானால், தமிழ் பேசும் மக்கள் தங்களுக்குள்ளிருக்கும் முரண்பாடுகளைக் களைந்து தமிழ் தேசியம் என்ற தளத்தில் ஒன்றிணைய வேண்டும்.

நடைபெற்ற 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' என்ற போராட்ட வடிவம் நடந்து முடிந்த எழுச்சிப் பேரணியுடன் மட்டும் நிறைவடைந்து விடாமல் ஒரு சிவில் போராட்ட அமைப்பாக உருவாக்கப்படவுள்ளதாக தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வழிமுறையில் மக்கள் ஒன்றிணைத்து தொடர்ந்து ஜனநாயக ரீதியிலான செயல் முறைகள் முன்னெடுக்கப்படுமானால் வரவேற்கத் தக்கதே.

மற்றுமொரு விடயத்தையும் இங்கு பதிவு செய்ய வேண்டும். எழுச்சிப் பேரணி முழுமையாக வெற்றிபெற்றுள்ள நிலையில், இப்போது சில அரசியல்வாதிகள் ஊடக சந்திப்புகள் ஊடாகவும், அறிக்கைகள் மூலமாகவும் சில முரண்பாடான



கருத்துக்களை வெளியிடுகின்றனர். இதனை அவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில், இந்தப் போராட்டத் தின் வெற்றியை, அதன் மகிமையை இவ்வாறான செயற்பாடுகள் நிச்சயம் பாதிக்கும்.

# நவாலியூர் சோமசுந்தரப்புலவர் திருவுருவ ஓவியம் திறப்பு!

ஈழத்தில், யாழ். மண்ணில், வலிகாமம் தென் மேற்கின் அடையாளமாகிய, உலகத்தமிழரால் 'தங்கத்தாத்தா' என்று அழைக்கப்படும், பதினையாயிரம் செய்யுள்களைப் பாடிய, நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் திருவுருவ ஓவியம், February 12, 2021 தினம் திரை நீக்கம் செய்யப் பெற்றது.

கிராம உத்தியோகத்தர் திரு.ஜீவா ஷஜீவனின் முயற்சியில், சிங்கைத்தமிழார்வலர், திரு. கோபால் மோகன்ராசு அவர்களின் முழு நிதிப்பங்களிப்பில், ஓவியர் சு.ராஜன் அவர்களால் இத்திருவுருவ ஓவியம் வரையப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

புலவருக்கு வரையப்பெற்ற ஓவியத்தை, வலி. தென் மேற்கின் பிரதேச செயலாளர் திருமதி. யசோதா உதயகுமார் அவர்களும், இருபத்து மூன்று ஆண்டுகளாக நவாலி வடக்கின் கிராம அலுவலராக கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. அ.தனபாலரத்தினம் அவர்களும் இணைந்து, புலவர் பிறந்தபோது எந்த ஆலயத்தின் மணிகள் தானாகவே ஒலித்தனவோ, அந்த ஆலயமாகிய, அட்டகிரி முருகன் ஆலயத்தில் வைத்து திறந்து வைத்தனர்.



மேலும், நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும், இசை பயிலும் மாணவி ஒருவருக்கு வயலின் ஒன்றும், வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட பெண் ஒருவருக்கு வாழ்வாதாரத்துக்கான சமையல் பாத்திரங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

# பரவுவதைத் தடுக்கவும்.

## கோவிட்-19 மிகவும் ஆபத்தானது.

## வீட்டிலேயே இருக்கவும்.

## உயிர்களைக் காப்பாற்றுங்கள்.



**ontario.ca/coronavirus**
இணையத்துக்கு வருகை தாருங்கள்
ஒன்ராறியோ அரசுக்காக ஒன்ராறியோ அரசினால் வழங்கப்பட்டது.

Ontario

# ELITE TOWER 571/15 Galle Road, Wellawatte, Colombo-06

## 2 Bedroom Apartments For Sale

*Conditions Apply

- Master bedroom with bathroom and balcony
- 2 rooms with balcony and a shared bathroom
- Master bathroom with hot water facility
- Ample car parking on the ground floor
- Individual electricity meters
- Kitchen- pantry cupboard and stainless steel sink
- Rustproof power coated aluminum windows
- A/C provision for master bedrooms
- Roof top for private functions
- Fire protection system on each floor
- Fully secured 8 ft high parapet wall
- Stand by generator for common areas
- Lift facilities for all floors
- 3 phase electricity
- Tube well facility
- 24 hours security service
- Aesthetic facilities and ETC

$149,500 CAD
Rs. 23 M
950 sq ft














Raj 416 568 0686
Suresh 0094 77350 6881

# ஆழியவளை

**தொடர் கட்டுரை**

**யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்**



கந்தசாமி முத்துராஜா

## ஏற்பட்டுவரும் மாற்றங்கள்

**1. கல்வித்துறையில்** – ஆழியவளையில் ஓர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை உண்டு. இப்பாடசாலை 1885ஆம் ஆண்டு கத்தோலிக்க திருச்சபையால் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையைச் சுருக்கமாக C.C.T.M. பாடசாலை என்று அழைப்பர். முதலில் ஐந்தாம் வகுப்புவரையே பாடசாலை இருந்தது.

வசதி படைத்த குடும்பத்துப் பிள்ளைகள் அதற்குமேல் பருத்தித்துறை, யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய இடங்களிற் சென்று பாடசாலை விடுதிகளில் தங்கியே படித்தனர். இப்பொழுது ஆழியவளைப் பாடசாலையிலே க.பொ.த. சாதாரண வகுப்புக்கள் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நடைபெறுகின்றன. தற்பொழுது க.பொ.த. உயர்தர வகுப்பும் கற்றுக் கொடுக்கப்படுகின்றது.

ஆரம்ப காலத்தில் சம்மாட்டிமார் மற்றும் காணிநில உடைமைக்காரரின் சில பிள்ளைகளுக்கு மட்டும்தான் உயர்கல்வி வாய்ப்புக் கிடைத்தது. காலப்போக்கில் அயல் கிராமத்திலுள்ள உடுத்துறைப் பாடசாலையில் எட்டாம் வகுப்புத் தொடங்கப்பட்டது. பின்பு, 1960களில் பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரத்தினம், கிடுகுக் கூரையாக இருந்த உடுத்துறைப் பாடசாலையை ஓட்டுக் கூரையாக்கி, மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தி, அங்கு பத்தாம் வகுப்பைத் (க.பொ.த. சாதாரணம்)



தொடங்குவதற்கும் ஒழுங்குசெய்து கொடுத்தார். இந்த வாய்ப்பானது, உடுத்துறையைச் சூழவுள்ள பல ஊர்ப் பிள்ளைகளையும், உழைத்துக் கொண்டே பத்தாம் வகுப்பைக் கற்பதற்கு வழிகோலியது. ஆனால், 1970களிலும் கூட க.பொ.த. உயர்தரம் கற்பதற்குப் பட்டினங்களுக்குச் செல்லவேண்டிய இடர்பாடு இருந்தது. இதனால் எல்லாப் பிள்ளைகளினாலும் உயர்தரம் கற்கவும் பல்கலைக்கழகம் செல்லவும் இயலவில்லை. சம்மாட்டிமாரினதும், ஏனைய பணவசதி உள்ளவரினதும் பிள்ளைகளினால் மட்டும் பெறக்கூடியதாக இருந்த உயர்கல்வி, ஏழைப்பிள்ளைகளுக்குக் கிட்டவில்லை.

ஆழியவளைக் கிராமத்தின் பிள்ளைகள் இரண்டு மைல் தூரம் ஊடுகாட்டுக்குள்ளால் நடந்துசென்று பத்தாம் வகுப்பைக் கற்றனர். இதேபோல் பன்னிரண்டாம் வகுப்பையும் உடுத்துறையில் வைத்திருந்தால், கூலித்தொழிலாளரின் பிள்ளைகளும் 'உழைத்துழைத்துக்' கற்றிருப்பர். உண்மையிலே இக்கிராமத்துப் பிள்ளைகள் காலை, மாலை மற்றும் சனி, ஞாயிறுகளில் உறுதியுடன் உழைப்பில் ஈடுபடுவர். இவர்களது படிப்பு, பாடசாலையில் மட்டும்தான்.

பிரத்தியேகக் கல்வியைக் கற்கும் வசதிகள் இக்கிராமங்களில் இருந்ததில்லை. வழக்கமாகப் 'பெண் கல்வி' இப்பகுதிகளில் மிகவும் குறைவு. 1930களில் பிறந்த ஆழியவளைப் பெண்ணாகிய சுப்பையா அபிராமிப்பிள்ளை என்பவரே இக்கிராமத்திலிருந்து படித்து ஆசிரியையாகிய முதற் பெண்ணாவார். தற்போது ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் கற்கின்றனர். பல்கலைக்கழகம் செல்கின்றனர். அரச பணியிலுள்ளனர்.

1986இல் ஆழியவளைப் பாடசாலையில் பத்தாம் வகுப்புத் தொடங்கப்பட்டது. தற்போது, அதிபருடன் சேர்த்து இருபத்தொரு ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். ஏறத்தாழ நானூறு மாணவர்கள் க.பொ.த. உயர்தரம் வரை கற்கின்றனர். போர்ச்சூழல் காரணமாக ஏற்பட்ட புலப்பெயர்வுப் போக்கு ஆழியவளையிலும் இடம்பெற்றுள்ளது. ஏறத்தாழ நூறு பேர் அளவில் கனடா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் உள்ளனர்.

இத்தகைய வறுமை, வாய்ப்பின்மை, என்பவற்றின் மத்தியிலும், ஏறத்தாழ 1930களில் இருந்து 2003 மார்கழி வரையில் காணப்படும் 'கல்வி' வளர்ச்சியின் பயனாகப் பட்டதாரிகள் 1960களுக்குப்பின் ஆழியவளையில் உருவாகினர்:

ஆழியவளையைச் சேர்ந்த சிலர் ஆசிரியர்களாகவும், தபால் அதிபர்களாகவும் எழுதுவினைஞர்களாகவும் அரச சேவையில் கடமையாற்றுகின்றனர்.

தொடரும்...)

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361




ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்
போல் ஐன்ஸ்லி
வட்டாரம் 24, ஸ்காபரோ - கில்வூட்
TORONTO

உதவி தயாராக உள்ளது
தொகுதியில் வாழ்வோருக்கான ரொறன்ரோ நகரசபை சம்பந்தப்பட்ட
அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண்பது எமது சேவை

- வசதிக்கேற்ற விலையில் வீடுகள்
- வளர்ப்பு பிராணிகள் மற்றும் விலங்குகளுக்கான சேவை
- அடுக்கு மாடிகளுக்கான தரநிலை • நூலகம்
- கட்டிட அனுமதிப்பத்திரம் • குப்பை அகற்றல்
- குழந்தை பராமரிப்புக்கான மானியம் • நகரசபைத் தேர்தல்
- அவசரகால வதிவிட வசதிகள் • தீயணைப்பு சேவை
- நகராட்சி உரிமம் மற்றும் தரநிலைகள்

எமது சமூக தொடர்பு சாதனங்களும், வலைத் தளமும் தினமும் பதிவேற்றம் செய்யப்படுவதால், தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள பின்வரும் தகவல் சாதனங்களைப் பாவிக்கவும்.
Twitter: @Ainslie_Ward24 Instagram: @cllrainslie
Facebook: @ward24scarboroughguildwood

- "ஒன்றாரியோ வேலைகள்" நிறுவனத்தின் சேவைகள்
- வாகனத்தரிப்பிடம்
- சோலைகள் • பொதுப் போக்குவரத்து
- நகர்காவலர் சேவை • மரங்கள்
- பொதுச் சுகாதார சேவை • குடிநீர்
- தெருக்கள் • ஆதன வரி
- மீள்சுழற்சி மற்றும் உணவுக்கழிவு பசுமைத் தொட்டி

பொது சுகாதார சேவை அலுவலகத்தின் தகவல் தொலைபேசி இலக்கமும் 311 என்ற இலக்கமும் அதி கூடிய அழைப்புக்களை ஏற்றுக்கொள்வதால், ரொறொன்ரோ மாநகரசபையின் www.toronto.ca/covid19 என்ற வலைத் தளத்தில் 53 மொழிகளில் உங்களுக்கு வேண்டிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

CONSTITUENCY OFFICE
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

TORONTO CITY HALL OFFICE
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

# அனர்த்தம்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

அதிகரித்துள்ளது.

தற்பொழுது கற்பித்தல் கலையில் பல்வேறு நுட்பங்களை ஆசிரியர்களும் பாடசாலை அதிபர்களும் பயன்படுத்தி வருவதைத் தொடர்ந்து மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிலும், இயல்பு வாழ்க்கையிலும் ஓரளவு மாற்றங்கள் ஏற்படத் தெடங்கியுள்ளது. அந்த வகையில் தற்போது பாடசாலை மாணவர்களுக்காக உலகளாவிய ரீதியல் அறிமுகப்படுத்தப் பட்டுவரும் 'புதிய கற்பித்தல் கலை' இல் (New Pedagogy) அதிகளவில் கணினி வழிக் கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

**புதிய கற்பித்தல் கலையில் கணினியைப் பயன்படுத்திக் கற்றல்-கற்பித்தலை மேற்கொள்ளும் பொழுது, ஆசிரியர்கள் அடைந்து கொள்ளும் பயன்கள்:**

* கற்பித்தலுக்காக கலைத் திட்டம் தயாரிக்க உதவுதல்.
* கல்வி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் செய்யப் பயன்படுதல்.
* திட்டமிடலை மேற்கொள்வதில் உதவியாக இருத்தல்.
* மாணவர்களினது அடைவு மட்டங்களை மதிப்பீடு செய்து கொள்ள உதவுதல்.
* ஆசிரியர்களின் தேடலும் அதிகரிக்கும்.

எனவே, இவ்வாறான தொடர் அனர்த்த காலங்களில் நீண்ட காலத்திற்குப் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் இயங்க முடியாதநிலை ஏற்படும் சந்தர்ப்பங்களில் மாணவர்கள் வீட்டில் இருந்தபடியே பாடங்களைக் கற்கக்கூடிய வகைகளில் பாடத் தேர்ச்சிகளை வடிவமைக்கலாம். அதேவேளை, மதிப்பீடுகளையும் 'ஒன்லைன்' மூலமே மேற்கொள்ளலாம். இதனைப் பின்வரும் முறையில் நடைமுறைப்படுத்தலாம்.

01. Zoom வகுப்புகளை ஒழுங்கு செய்து ஒரே நேரத்தில் பல மாணவர்களுக்கு ஒரே ஆசிரியரால் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ளல்.
02. இணைய வழியிலான கல்விக்கான பாடத்திட்டங்களைத் தயாரித்தல்.
03. தொலை தூரக்கல்வி (On-Line Education) மூலமான கல்வி வழங்குதல்.
04. தொலைக் கலந்துரையாடல் (Tele Conference) மூலம் கற்றல்.
05. தொலைக்காட்சிகள்,வானொலிகள், தினசரிகள் மூலமான கல்விச் சேவைகளை வழங்குதல்.
06. ஆசிரியர்களின் தனிப்பட்ட முகநூல்கள், வைபர், வட்ஸ்அப் என்பவற்றின் ஊடாக மாணவர்களுக்கு உதவக்கூடிய பாடங்கள் மற்றும் சுருக்கக் குறிப்புக்களை வழங்குதல்.



மாணவர்கள் கணினிவழிக் கற்றல் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் வழிகாட்டல்களையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல். கணினி வழிக் கற்றல்- கற்பித்தலில் ஆசிரியருக்குப் பின்வரும் நான்கு வகைகளில் கணினிகள் முக்கிய பங்காற்றுகின்றன:

1. வினாத்தாள்களைத் தயாரிக்கவும், விடைத்தாள்களை மதிப்பிடவும் மற்றும் தேர்வு முடிவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு-
2. மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியை ஆண்டு முழுவதும் கவனித்து அவர்கள் தொடர்பான வளர்ச்சிப் பதிவேடுகளை மேற்கொள்வதற்கு-
3. பாடப் பகுதிகளுடன் தொடர்புடைய பிற தகவல்களை கணினியைப் பயன்படுத்தி தெரிந்து கொள்ள, மாணவருக்கு வழிகாட்டுவதற்கு-
4. தனிப்பட்ட ஒவ்வொரு மாணவனின் வளர்ச்சி மற்றும் செயல்திறன்களை சக மாணவருக்கும், மற்றைய ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும், மற்றும் பாடசாலை நிர்வாகத்திற்கும் தெரியப்படுத்துவதற்காக. தொலைதூரக் கலந்துரையாடல் ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

**அனர்த்த காலக் கற்றல் செயற்பாட்டில் கணினிவழிக் கல்வி மூலம், மாணவர்கள் அடைந்துகொள்ளும் பயன்கள்:**

* கணினி மூலமான செயற்பாடு மாணவர்களை அதிகமாகக் கற்பதற்கு ஊக்குவிக்கின்றது. இதனால், கணினியின் மூலம் கற்பதால் மாணவர்கள் கற்பித்தல் சாதனங்களை அவரவர் கற்கும் வேகம் மற்றும் தேவைக்கேற்ப பயன்டுத்திக்கொள்ளலாம்.
* கணினியைப் பயன்படுத்தும் போது, கணினி மிக விரைவாகவும், சரியாகவும் தகவல்களை கணினித் திரையில் உருவாக்கித் தருவதுடன், ஒவ்வொரு மாணவரும் தகவல்களைப் புரிந்துகொள்ளப் பயன்படுத்திய காலத்தையும் கணினி பதிவு செய்து, மாணவர்களின் நோக்கங்களை அடைவதற்கு ஏற்ற அனுபவங்களையும் கொடுக்கின்றது.
* மீளக்கற்றலுக்கு கணினிக்கல்வி அதிகளவில் பயன்படுகின்றது. கணினிவழிக் கற்பித்தலில், கற்றல் கற்பித்தலை மேம்படுத்தப் பலவகையான மென்பொருள்கள் (Software) உள்ளன. மாணவர்கள் இந்த மென்பொருள்களில் பதிந்துள்ள தகவல்களைத் திரும்பத்திரும்ப பயிற்சி செய்து (Drill and Practice) மனதில் இருத்திக் கொள்வதன் மூலம் நீண்டகாலத்திற்கு அவற்றை நினைவில் வைத்திருக்கலாம். இல்லாவிட்டால், கற்ற விடயங்கள் குறுகிய காலத்திற்கே நினைவில் இருக்கும்.
* மாணவர்கள் திரும்பத் திரும்ப கணினியைப் பயன்படுத்துவதால் கணினி சலிப்படையாது, கோபப்படாது. அதற்குப் பதிலாக மாணவர்கள் சரியான பதிலைக் குறித்தால், கணினித்திரையில் (Monitor) பாராட்டு வார்த்தைகளும், புன்னகைக்கும் முகங்களும் தோன்றுவதுபோல மென்பொருள்கள் திட்டமிடப்பட்டுத் தயாரிக்கப் பட்டுப் பதிவேற்றம் செய்துவைத்தல் வேண்டும்.
* புதிய கற்பித்தலில் திட்டமிடப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையத் தயாரிக்கப் பட்ட (Programmed Instruction) பாட விடயங்களையே மென்பொருளாக மாற்றி கணினியைப் பயன்படுத்தி மாணவர்கள் எளிதாகக் கற்றுக் கொள்கின்றனர். அதற்கு மாணவர்கள், கணினியைப் எவ்வாறு திறந்து செயற்படுத்துவது, மென்பொருளை எவ்வாறு பயன்படுத்துவது என்பன போன்ற அடிப்படை அறிவைத் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும்.

இதன்மூலம், கணினித் திரையில், பாட விடயங்கள் சிறுசிறு தகவல்களாகவோ அல்லது எளிய சோதனைகளாவோ வெளிப்படுத்தப்படுவதால், கணினித் திரையில் தகவல்களை முழுமையாகப் படிக்க வேண்டும். பாடவிடயங்களின் பின்னர் பரீட்சை வினாக்களாக இருப்பின் பரீட்சை வினாக்களின் ஆரம்பம் முதல் முடிவு வரை பொறுத்திருந்து வாசிக்க வேண்டும். ஒவ்வொரு சோதனையின் அல்லது தகவலின் இறுதியில் அதனுடன் தொடர்புடைய ஒன்று அல்லது பல வினாக்கள் கேட்கப்படும். இவ்வினாக்கள் குறுவினா வகை, கோடிட்ட இடத்தை நிரப்புதல், பல்தேர்வு வினாக்கள் (Multiple Choice), ஒன்றுக்கு மேற்பட்ட பல கூற்றுக்களில் மிகப் பொருத்தமான கூற்றை அல்லது கூற்றுக்களைத் தேர்ந்தெடுத்தல் போன்றவற்றில் ஏதேனும் ஒரு வகையான வினாவைப் பின்பற்றியதாக இருக்கும்.

கணினித் திரையில் தோன்றும் வினாவிற்கு பொருத்தமான பதிலை மாணவர் தெரிவு செய்து புள்ளியிட அல்லது கீறிட வேண்டும். மாணவர்கள் வழங்கும் பதில் பொருத்தமானதாகவும் சரியானதாகவும் இருப்பின், ஏற்கனவே திட்டமிடப்பட்டு பதிவேற்றம் செய்தமைக்கு அமைய கணினித் திரையில் பாராட்டு வார்த்தைகள் அல்லது புன்னகையுடன் கூடிய முகம் ஒளிரும். ஆனால் அவர்கள் அளித்த பதில் தவறாக இருப்பின், மாணவர் மீண்டும் முந்தைய தகவலைப் படிக்க வேண்டும். இரண்டாவது முறையும் பதில் தவறாக இருப்பின், கணினியிலேயே சரியான பதில் ஒளிரும் (Display). இதனால், மாணவர்கள் ஒரு தகவலை முழுமையாகத் தெரிந்து கொண்ட பிறகே அடுத்த தகவலுக்குச் செல்ல இயலும். தகவலை முழுமையாகத் தெரிந்து கொள்வதற்கு மாணவர் எத்தனை காலம் வேண்டுமாயினும் எடுத்துக் கொள்ளலாம். இது மாணவர்களின் கற்றலை ஊக்குவிப்பதுடன், அவர்களின் தனிமையையும், தன்னம்பிக்கை யின்மையையும் போக்கும்.




வகுப்பறைக் கற்றலில் தனிப்பட்ட மாணவனின் கற்றலை விட அனைத்து ஒட்டு மொத்த மாணவர்களினதும் கற்றலுக்கே முக்கியத்துவம் தரப்படும். ஆனால், கணினி வழிக் கற்றலில் ஒவ்வொரு தனிப்பட்ட மாணவனும் அவருக்குத் தேவையான நேரத்தைப் பயன்படுத்தி, பாட விடயங்களை முழுமையாகத் தெரிந்து கொள்ளலாம். அவரவர், திறமைக்கேற்ப அடைவுகளை வெளிப்படுத்தலாம்.

இவ்வாறான கணினி வழிக் கல்வியைச் சரியான முறையில் பயன்படுத்தக் கூடியதாக ஆசிரியர்களும் பெற்றோரும் விழிகாட்டுவதுடன், அவர்களுடைய செயற்பாடுகளைக் கண்காணித்தும் வர வேண்டும். அல்லாவிடில் கணினி அறிவை மாணவர்கள் தவறான நோக்கத்திற்காகப் பயன்படுத்தும் ஓர் ஆபத்தான நிலையும் உருவாகலாம் என்பதால் பெற்றோரும் ஆசிரியரும் விழிப்புடன் இருந்து வழிகாட்டுவார்களாயின் கொரோனாவின் பாதிப்பிலிருந்து எமது மாணவர்களின் இழந்த கல்வியை மீட்டெடுக்கலாம்.

## உலகை அச்சுறுத்தும் ஊழ்வினை நோய்!

உலகை அச்சுறுத்தும் ஊழ்வினை நோயாக
பலரையும் வாட்டி வதைக்கிறதே ஏனாமோ?
முன்னோர் மொழிந்தனரே யாவும் கலியுகமாம்
தன்னாலே நீங்குமே தான்

மாற்று மருந்தின்னும் மக்களுக்கு எட்டவில்லை
சாற்றுதற்கு அரிதாமே சவாலான நிலையதே
போற்றுவோமே இறைவனை பாவங்கள் நீங்குதற்கு
தாற்பரியம் காத்திடுவோம் தற்காப்பைப்
பேண்ணிடுவோம்

ஆரோக்கியம் பேண அமைந்த விதிமுறையை
வீராப்புடனே விரும்பியே இங்கு வளர்த்திடுவோம்
இடைவெளி கருதிடுவோம் இணைந்தே எந்நாளும்
நடைமுறை கடைப்பிடிப்போம் நாம்

தற்காத்துக் கொள்ளத் தேவையான சரக்குவகை
சற்றும் குறையாமல் சமையலறையில் உண்டாமே
சிறிதேனும் சுகவீனம் எனநாம் உணர்ந்தாலோ
குறியாய்க் கவனித்தால் குறைத்திடலாம்
பெருந்தாக்கம்



அன்றாடம் உணவில் சீரகம் மிளகு என்றும்
நன்றாம் ஓமம் வெந்தயம் கூடவே மஞ்சள்
சேர்த்து உண்ணும் பழக்கத்தை தினமும்
நேர்த்தியாய் கடைப்பிடித்தல் நன்று

சுத்தம் பேணல் சுகம் தருமே நாமறிவோம்
நித்தம் பல்துலக்கி நீராடித் தோய்த்த
உடை அணிந்து உள்ளதால் இறைவணங்கி
நடைமுறை கடைப்பிடித்தல் நன்று.

திருமதி மனோன்மணி வரதராஜா
ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை, ரொறொன்ரோ

இன்பத்திலும் துன்பத்திலும்
மனம்விட்டு பேச துணை இல்லாத
போதுதான் தெரியும்
உண்மையான அன்பின் பெருமை



# MORTGAGE SOLUTIONS

## SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS

# 416.298.2777

# $375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

# Master - திரைவிமர்சனம்



ஆரணி. ஞா

சென்ற தமிழ் வருடப் பிறப்பிற்கு வெளியிட இருந்த விஜய் இன் திரைப்படமான Master மிகுந்த எதிர்பார்ப்புக்குப் பிறகு 2021 பொங்கலன்று வெளியாகி January 29இல் Amazon Primeஇல் வெளியிடப்பட்டது. இது இயக்குனர் லோகேஷின் மூன்றாவது படமாகும்

இதில் விஜய் 'JD' என்ற ஒரு பல்கலைக் கழகப் பேராசிரியராக நடித்துள்ளார். வழக்கத்துக்கு மாறான இவ்வேடத்தில் JD மது பாவனைக்கு அடிமையானவராகக் காட்டப்படுகிறார். இருந்தாலும் அவர் மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தந்து அவர்களுக்கு நண்பராகவும் இருக்கிறார். இதனால் பல்கலைக்கழக நிர்வாகிகளுக்கு JDயைப் பிடிக்கவில்லை.

பல்கலைக்கழகத்தில் ஏற்படும் ஒரு சம்பவத்திற்கு JD பழியை ஏற்று சில மாத விடுமுறை எடுக்கிறார். இவ்வேளையில் ஒரு சீர்திருத்தப் பள்ளிக்கு ஆசிரியராகத் தான் மாற்றப்பட்டுள்ளதாக JD அறிகிறார். தான் குடிபோதையில் அந்த மாற்றத்தைக் கையெழுத்திட்டு ஏற்றுக்கொண்டதாக எண்ணி அப்பாடசாலையில் ஆசிரியராகச் சேருகிறார்.

அங்குள்ள மாணவர்களைப் பவானி (விஜய் சேதுபதி) என்ற ஒரு முந்தைய குற்றவாளி போதைப் பழக்கத்துக்கு அடிமையாக்கித் தனக்காக வேலை செய்வித்து சிறைக்கு அனுப்புகிறார். JD இந்த மாணவர்களைப் பவானியிடமிருந்து காப்பாற்றுவாரா? தனது குடிப்பழக்கத்தைக் கைவிடுவாரா? என்று இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.



வழக்கமான விஜய் படங்களில் பார்வையாளர்களுக்காகச் சேர்க்கப்படும் நகைச்சுவை, காதல் மற்றும் பாடல் காட்சிகள் குறைவாக இதில் இருக்கின்றன. ஆனால் வழமைபோல் JDஇன் கதாபாத்திரம் முன்வந்து பிறருக்கு நன்மை செய்து படத்துக்கு ஒரு நல்ல கருத்தைத் தருகிறது. இதில் முக்கியமான கருத்துகளாக தன்னம்பிக்கையும், நாம் சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களை எவ்வாறு அணுகி அவர்களை வாழ்வில் உயர்த்த வேண்டும் என்றும் கூறப்படுகிறது. இவை JD பல்கலைக்கழக மற்றும் சீர்திருத்தப் பள்ளி மாணவர்களுடன் பழகும் காட்சிகளில் தெரியப்படுத்தப்படுகின்றன.

குறிப்பாக JD பள்ளி மாணவர்களுடன் பேசும்போது அவர்கள் அவரைக் கேலி செய்யும் காட்சியில் மேற்கூறிய கருத்து தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது. பாட சாலையில் பணிபுரிவோர் மாணவர்களை மதிக்கவில்லை. திருந்த வாய்ப்புக் கொடுத்தால்தான் அவர்கள் திருந்துவர் என JD விளக்குகிறார். ஒருவர் தங்களை மதித்துப் பேசுகிறார் என்றவுடன் மாணவர்களும் அடங்கி JDஇன் அறிவுரையைக் கேட்கின்றனர்.

இப்படத்தில் பல்கலைக்கழக மாணவி சவித்தா, பேராசிரியர்கள் (அன்றியா மற்றும் மாளவிகா) என மூன்று பெண் கதாபாத்திரங்கள் இருக்கின்றன. JDஇன் பல்கலைக்கழகக் காட்சிகள் முடிந்ததும் இவர்களுக்கு அதிக காட்சிகள் இல்லை. பெண் கதாபாத்திரங்களைச் சேர்க்க நினைத்த ஒரு முயற்சி என்று இது தோன்றினாலும், இவர்களது கதைகளுக்கு நேரம் அளிக்கப்படாததால் இவை தேவையற்ற கதாபாத்திரங்களாகத் தோன்றுகின்றனர்.

JD பல்கலைக்கழகத்தை விட்டுப் போகும் காட்சிக்கு முன்வரும் பெரும்பாலான காட்சிகளும் இவ்வாறு தேவையற்றதாகத் தெரிகின்றன. மூன்று மணிநேரப் படத்தில் இந்த அறிமுகக் காட்சிகளைச் சுருக்கி இருக்கலாம். இந்த நேரத்தில் வரும் ஆடல் மற்றும் சண்டைக் காட்சிகள் பார்வையாளருக்காக திணிக்கப்பட்டது போல் தெரிகிறது. சில சந்தர்ப்பங்களில் JD பவானியை பெண்ணிற்கு ஒப்பிட்டுக் கேலி செய்த வசனங்களும் தேவையற்றதாக இருந்தன.




இருந்தாலும் இப்படத்தில் இருக்கும் தன்னம்பிக்கை, மரியாதை போன்ற கருத்துகளுக்காக இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.

## துளிப்பா!

மிகவும் முக்கியம்
நம்மை நாம்
காதலிப்பது!

கவிஞர் இரா.இரவி




MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville



Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228



## தமிழுக்கு அழிவெனில்

கொட்டும் மழையில் நனைவோம்
கொதிக்கும் வெயிலில் காய்வோம்
எட்டும் உயரம் தொடுவோம்
எளிய வாழ்வில் இணைவோம்

வாழ்வை வரமாய் நினைப்போம்
வந்த துயரினை மறப்போம்
ஏழ்மை நிலையிலும் சிரிப்போம்
எவர்க்கும் அன்பினை விரிப்போம்

உழைப்பால் உயரத் துடிப்போம்
ஊறு கண்டால் வெடிப்போம்
பிழைகள் நேர்ந்தால் களைவோம்
பிரியம் வந்தால் அணைப்போம்

புன்னகை கண்டால் நெகிழ்வோம்
புகழ்ச்சி வந்தால் நெளிவோம்
சொன்னவை மீறாமல் நடப்போம்
சொந்தத்தை விலகிடா திருப்போம்
அடிமை வாழ்வினை துறப்போம்
அகந்தை தன்னை வெறுப்போம்
விடிவை நோக்கி நடப்போம்






விந்தை கண்டால் வியப்போம்

வானம் நோக்கி நிமிர்வோம்
வையம் காத்திட நினைப்போம்
தானம் செய்ய முனைவோம்
தமிழுக்கு அழிவெனில் அழிவோம்



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

## மூத்த இனிய செம்மொழி



வாசகர்களும் மக்களும் அகத்தியரும்
எழுதுகோலும் புத்திஜீவிகளும்
ஆழமாக அறவழியில் தேவை உணர்ந்து
மனச்சாட்சிகொண்டு சிந்திக்கின்றனர்;

தொன்மைத் தமிழ் மொழியின் ஒலியில்
சிதைவுகள் நிகழ்வதை உணரும்போதெல்லாம்
இதயம் அதிர்ந்து வலி எடுக்கின்றது

அழகிய தமிழ்ப் பெயர்கள் கவலையுற
அந்நிய மொழிக் கவர்ச்சி கலந்து பெயர் அடையாளம்
சூடிக்கொள்வதன் காரணம் புரியவில்லை

தமிழ் இதழ்களிலும் ஏனைய படைப்புகள்
தமிழ் ஆக்கங்களிலும் கஞ்சியில் பயறுபோல்
பிறமொழிக் கலப்புகள் செருகப்படுவது வேதனை தருகின்றது

தொலைக்காட்சி அலைவரிசைகளிலும்
வானொலிகளில் தொழில்நுட்ப சாதனங்களிலும்

கலப்படமற்ற தமிழ் பேசுவதில் எழுதுவதில்
இடர்பாடுகள் தெளிவின்மைகள் தெரிகின்றன

வணிகவேக விளம்பர வகையறாக்களிலும் பிறமொழிகளின்
சொல்லாடல்கள் பல வழிகளில் புகுத்தப்படுகின்றன

பண்டைய வாழ்வியல் வரலாற்று யுகத்தில்
எழுதிய தமிழ் ஏட்டு எழுத்துச் செல்வங்களைத்
தீயிலும்; ஆற்றிலும்; வீசும்படியாகத்
தூண்டிவிட்ட செய்திகளைப்
பழைய இலக்கியச் சொற்களில்
சுழியோடித் தடவிப்பார்த்து ஆய்வாளர் அறிந்துகொள்வர்.

செம்மொழியாம் தமிழ்மொழியில்
கலப்படம் நடைபெறுவது பற்றிய காத்திரமான
தேடல்கள் அக்கறைகள் உறுதிப்பாடுகள்
அறிஞர்களின் ஆழ்ந்த சிந்தனை வெளியில் தோன்றுவது
மொழியின் அழகியலை நிலைநாட்டும் முயற்சியெனப்
பனை ஓலையும் எழுத்தாணியும் நம்புகின்றன.



முத்துராஜா